

எங்கள்
# முற்றம்
கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்

டிசம்பர் 2025

விலை ரூ. 100/=

கவிஞர் மாவை வரோதயனின், 'குருதி படிந்த தேசம்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும், நினைவு நிகழ்வும் 16.11.2025 இல் கொழும்பு தமிழ்ச் சங்கம், வினோதன் மண்டபத்தில், மாவை 60 நினைவுக்குழு , செம்புலம் மக்கள் கூடம் ஆகியோரின் இணை ஏற்பாட்டில் ... காட்சிகள் சில














எங்கட புத்தகங்களின் வெளியீடுகளான 'சியாமளா யோகேஸ்வரன்' அவர்களின் நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு 17.11.2025இல் எங்கட புத்தகங்கள் இல்லத்தில்







சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலை பரிசளிப்பு விழாவும் நிறுவநர் நாளும்










பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலை பரிசளிப்பு விழா 2025










# எங்கள் முற்றம்

**கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்**

**ஆசிரியர் : அழ. பகீரதன்**

**ISSN NO : 2783–8889**

**இதழ் : 09 டிசம்பர் 2025**


*ஆடுதல், பாடுதல், சித்திரம் – கவி*
*யாதி யினைய கலைகளில் – உள்ளம்*
*ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்*
*ஈன நிலைகண்டு துள்ளுவார் – அவர்*
*நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில*
*நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்*
*காடு புதரில் வளரினும் – தெய்வக்*
*காவனம் என்றதைப் போற்றலாம்!*

*–பாரதி*


ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளர்களின் கற்பனையே. ஆக்கங்களைச் சுருக்கவும், மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துக்கள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துக்கள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான மறுமலர்ச்சி மன்றம், மக்கள் கலை இலக்கியப் பேரவை என்பன பொறுப்பாகாது.



இதழ் வடிவமைப்பு: சிவ பரதன்

நிழற்படங்கள், அட்டை வடிவமைப்பு: எஸ். அனுஜன்

ஆலோசகர்கள் :

மறுமலர்ச்சி மன்ற நம்பிக்கைச் சபை உறுப்பினர்கள்

சு. சுந்தரசிவம் – தலைவர்
கோ. சுதாகரன்– செயலாளர்
அ. பகீரதன் – பொருளாளர்
சோ. தேவராஜா
ந. சிவசுப்பிரமணியம்
சு. யாதவன்
ச. தனுஜன்

அச்சுப் பதிவு :
ஜே.எஸ். பிறின்ற்றேஸ்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு

வெளியீடு :

**மக்கள் கலை இலக்கியப் பேரவை**

**இல 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.**

**மறுமலர்ச்சி மன்றம்,**

**காலையடி, பண்டத்தரிப்பு.**



*Email : marumalarchy1972@gmail.com*

*T.P : +94 77 104 1945*


‘எங்கள் முற்றம்’ ஒன்பதாவது மாத இதழ் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. எங்களாலும் முடியுமா என்று வியக்கத்தான் வைக்கின்றது.

சென்ற இதழின் நிகழ்வுகள் பற்றிய அட்டை உள்பக்க படங்களில் பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி என்பதற்குப் பதிலாக பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி என தவறுதலாக குறிப்பிடப்பட்டமையை கவனத்திற்கு கொண்டு வந்தீர்கள். இத்தகைய தவறுகளுக்கு இடம் கொடாமல் இதழை வெளிக்கொணர நாம் எமது நேரத்தையும் ஆற்றலையும் சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

தரமான ஒரு சஞ்சிகையாக ‘எங்கள் முற்றம்’ இதழை வளர்த்தெடுப்பதும் மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டை முன்னிறுத்துவதும் இலக்கிய கர்த்தாக்களின் பணியாக உள்ளது.

மாணவர் ஆக்கங்களை நாம் பயில்நிலம் பகுதியூடாக வெளிக்கொணர்வதோடு இளையோர் இலக்கியங்களுக்கும் முன்னுரிமை கொடுப்பதோடு வாசகர்களாகிய மாணவர்கள் மத்தியில் இந்த டிசம்பர் இதழிலிருந்து அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் வரையிலான இதழ்களில் உள்ள விடயங்கள் சார்ந்து போட்டிகள் நடாத்த உள்ளோம். இந்த இதழ்களை நீங்கள் படிப்பதோடு பாதுகாத்தும் வைத்திருக்கவேண்டும். நண்பர்கள், உறவினர்கள், உங்கள் தெருவில் உள்ளவர்களையும் வாசிப்பதற்கு ஊக்குவிக்கவேண்டும்.

அடுத்த இதழிலிருந்து மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்தும் வகையில் விடயதானங்களை வெளிக்கொணர உள்ளோம்.

இந்த இதழ் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களை நினைவுகூர்வதாக அமைந்துள்ளது. மக்கள் கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி அவர்களது நினைவுகளையும் மீட்டுள்ளோம்.

**அண்மைய புயல், கனமழையினால் இடம்பெயர்ந்தும் மண் சரிவு, வெள்ளப்பெருக்கில் இருப்பிடத்தோடு உறவுகளை இழந்தும் தேடியும் தாங்கொணா இயற்கை அனர்த்தத்தில் துயருறும் அனைத்து மக்களின் உணர்வுகளுடன் நாம் சங்கமிக்கிறோம். உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலிகள்.**

–ஆசிரியர்

## உள்ளே....


தென்புலத்தார் தொழுதேற்றல்

- பேராசிரியர் கைலாசபதி பார்வையில் வெகுசன இலக்கியம் – ச.சஜீலன் – 22
- வீரகாவியம் 'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை – சோ.தேவராஜா – 30

நூல் அறிமுகம்

- சுதாராஜ் அவர்களின் 'கப்பல் கடல் வீடு தேசம் நாவல் பற்றிய அறிமுகக்குறிப்பு– எஸ். தனுஜன் – 19

கவிதைகள்

- விடுதலை என்பது வெளியில் இல்லை–02 – கவிமேகம் காளமேகம் – 03
- அப்பன் காலம் – இணுவையூர் இலட்சுமி புத்திரன் – 07
- எழுந்துவிடாதே – ஆயிரத்தில் ஒருவன் – 18
- கல்லுண்டாய் வெளியிலே – இயலான் – 20
- குறுங்கவிகள் நான்கு – அழ. பகீரதன் – 21
- டெங்கு நுளம்பு – சி. மகாலிங்கம் –29

சிறுகதைகள்

- ஞாபகங்கள்– செல்லத்துரை ஜெயராசா – 12
- யானைத்தாத்தா – சாதாரணன் – 38

இளையோர் அரங்கு

- பண்டைய வெளிநாட்டு அறிஞர் பார்வையில் இலங்கை– பகுதி 2– தொகுப்பு : சபா தனுஜன் –04

ஆய்வு

- ஏகாதிபத்தியம், சுயநிர்ணய உரிமை, மக்கள் இலக்கியம் நூல் தொடர்பான கருத்துக்கள் – பி. முத்துலிங்கம் – 17

தொடர்

- வேதாளமும் முருங்கையும் – அசன் –34

இளையோர் இலக்கியம்

- சாக்கடையில் புழுவாய் பிறந்த அரசன் –காலைச்செஞ்சூரியன் –26

மூத்தோர் படையல்

- இங்கிருந்து எங்கே? –கட்டுரை – பேராசிரியர் க.கைலாசபதி –08
- ஓ!யாது? ஓயாது!! கவிதை – கல்வயல் வே. குமாரசாமி 11

பயில்நிலம்

- தேவதை– சாதனா – 24
- மரங்களை நடுவோம் எஸ்.எஸ்.சேக்கா 28

பண்டைய மருத்துவமுறை

- மனித குலத்தின் நலமே மருத்துவ உலகின் நலம் – முனைவர் வா.மு.சே, ஆண்டவர் –16


அட்டையில் :

பேராசிரியர் க. கைலாசபதி

(05.04.1933– 06.12.1982)

அவர்களின் 43வது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி இவ்விதழ் காணிக்கையாக்கப்படுகிறது







# விடுதலை என்பது வெளியிலே இல்லை 02

*கவிமேகம் காளமேகம்*

தமிழர்க்கு என் வணக்கம்.

(கொஞ்சம் இசையோடு பாடலாம். –சதுர்ஷ்ட நடை)

தகதிமி தகதிமி
தகதிமி தகதிமி
தகதிமி தகதிமி

வருகுது வருகுது
வருகுது வருகுது
தேர்தல் வருகுது
வருகுது வருகுது
வருகுது வருகுது
தேர்தல் வருகுது
வாக்குகள் வேண்டி
மக்களைத் தூண்டி
நரம்பை முறுக்கும்
வார்த்தைகள் வீசி
வருகுது வருகுது
வருகுது வருகுது

தேர்தல் வருகுது
தேசியம் என்றொரு
மந்திரச் சொல்லை
மறக்காதுரைத்தீர்.
தமிழ் நிலம் என்றீர் தமிழரசென்றீர்
ஆண்டபரம்பரை மீண்டும் தமிழரை
ஆளுதல் வேண்டினீர்
தமிழ் நிலம் என்றீர் தமிழரசென்றீர்
ஆண்டபரம்பரை மீண்டும் தமிழரை
ஆளுதல் வேண்டினீர்

தேசியம் என்பதன் பொருள்
உணராமலே தேசியம் என்றீர்
விடுதலை என்பதன் பொருள்
உணராமலே விடுதலை என்றீர்.
எத்தனை கட்சிகள் எத்தனை காட்சிகள்
எத்தனை ஏய்ப்புக்கள்
தமிழரசென்றும் காங்கிரசென்றும்
தமிழ் மக்களின் தேசியம் என்றும்
ஈழ மக்கள் நாயகமென்றும் ..
கூட்டணி என்றும் ..
தேர்தலும் வந்தது தேர்தலும் வந்தது
பிரிந்த கயிறுகள் அறுந்தது மிச்சம்
பிரிந்த கயிறுகள் அறுந்தது மிச்சம்

தாம் தாம் தாம் தாம் தரிகிட தோம் தோம்
தக்கிட தோம் தோம் தரிகிட தோம் தோம்
தாம் தாம் தாம் தாம் தரிகிட தோம் தோம்
தக்கிட தோம் தோம் தரிகிட தோம் தோம்
தாம் தாம் புலிகளின் வாரிசு என்றவர்
போரிட வீரியம் கொண்டோம் என்றவர்
புலியாய் உறுமி எலியாய் பதுங்கினர்.
புலியாய் உறுமி எலியாய் பதுங்கினர்.

மண்ணுள் புதைந்தவர் எழும்பார் துயர்தாம்
கூண்டில் குருவிகள் சிறைகளில் சாவரோ
காணாமலே ஆக்கிய உறவுகள்
கனலில் மெழுகாய் கரைந்தவர்தாமோ?

கணவனை இழந்தோர் கண்ணீர் வீணோ?
குழந்தையை இழந்தோர் குரலும் வீணோ?
அரசியல் நீங்கள் எதற்காய் செய்கிறீர்?
அரசியல் நீங்கள் எதற்காய் செய்கிறீர்?
ஒன்றாய் நின்றே பேசியதுண்டா?
ஒன்றாய் ஒரு குரல் ஒலித்தது உண்டா?

ஓநாய்போல ஊழைகள் இடுவீரோ?
ஒற்றுமை என்பதை எதற்காய் சொல்கிறீர்?
எவர்க்காய் சொல்கிறீர்?

விடுதலை என்பது வெளியிலே இல்லை
ஒற்றுமை என்பதை செயலில் காட்டுவீர்
மிச்சங்கள் பிறகு...

தாம் தாம் தரிகிட தோம் தோம் தரிகிட
தாம் தரிகிட தீம் தரிகிட
தத்தரிகிட தித்தரிகி தத்தித்
தாளாங்கு தோம் தகதித் தாளாங்கு தோம்



# பண்டைய வெளிநாட்டு அறிஞர்கள் பார்வையில் இலங்கை

## பகுதி 02



## இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் ரோமாபுரியின் பேரரசர் கிளாடியஸ் சீசரின் அரண்மனைக்கு இலங்கைத் தமிழ் அரசனின் தூதுவர்களாகச் சென்ற தமிழர்கள்:



கிளாடியஸ் சீசர்

சுமார் கி.பி. 45 ஆம் ஆண்டில், இலங்கைத் தூதர்கள் நால்வரின் ரோம் விஜயம் பற்றி இலங்கையின் சரித்திரத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால், ரோமானிய வரலாற்றாசிரியர்களில் ஒருவரான பிளினி, தனது கலைக்களஞ்சியத் தொகுப்பான இயற்கை வரலாறு (*Natural History*) என்ற பெரும் புத்தகத்தில் நான்கு இலங்கையர்களுக்கென ஒரு அத்தியாயத்தை ஒதுக்கியிருக்கின்றார்.

அவர்கள் சிங்களவர்கள் அல்ல, தமிழர்கள் என்பதே ஆய்வாளர் கணிப்பு. ஏனெனில் அவர்களது தலைவனின் பெயர் 'ராச்சியாஸ்' ஆகும். இது அநேகமாக 'ராஜா' என்பதை ஒத்தது.

இலங்கை மன்னர்கள் பண்டைக் காலங்களில் பிற நாடுகளுக்குத் தமது தூதுவர்களை அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை, சீன எழுத்தாக்கங்களில் சிலோனில் இருந்து அங்கு அனுப்பப்பட்ட பல தூதுக் குழுக்களைப் பற்றிக்

குறிப்பிடப்பட்டிருப்பதாக சேர் எமர்சன் டென்னன்ட் அவர்கள் கூறுவதில் இருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

பிளினியின் குறிப்புகளுக்கு அமைய, பேரரசர் கிளாடியஸ் சீசரின் ஆட்சிக் காலத்தில் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது. 1574 இல் மன்னாரில் ஒரு கட்டிடத்தின் அத்திவாரத்தின் கீழ் கிளாடியஸின் ரோமானிய நாணயங்கள் போர்த்துக்கீசரால் கண்டுபிடிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பிளினி இத்தாலி நாட்டின் வடக்கில் உள்ள கோமோ என்ற இடத்தில் கி.பி. 29 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் ஒரு பல்துறை நிபுணர், வழக்கறிஞராகவும், வரலாற்றாசிரியராகவும், விஞ்ஞானியாகவும், படைவீரராகவும், மாலுமியாகவும் திகழ்ந்தார். அவர் தனது ஐம்பத்தைந்தாவது வயதில் இறந்தார். பிளினியின் இலங்கை பற்றிய அத்தியாயமானது இயற்கை வரலாறு நூல் தொகுப்பின் ஆறாவது புத்தகத்தில் 37 ஆவது தொகுதியில் உள்ளது.



**பிளினி**

இலங்கை அரசன் தனது தூதுக் குழுவை ரோமுக்கு அனுப்புவதற்கு அடிகோலிய சம்பவமாக, செங்கடலில் வருவாய் வசூலிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ரோமானியக் கப்பல் ஒன்று பருவ மழையால் பாதிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள ஹிப்பூரோஸுக்கு காற்றினால் இழுத்துச் செல்லப்பட்டது. (ஜெர்மனியைச் சேர்ந்த கிழக்கு நாடுகள் பற்றிய ஆய்வாளரான கிறிஸ்டியன் லாசென் அவர்கள் ஹிப்பூரோஸ் என்ற இடத்தை மன்னாருக்கும் புத்தளத்திற்கும் இடையில் உள்ள குதிரைமலை முனை என அடையாளம் காட்டுகின்றார்.)

ஐரோப்பா மற்றும் ஆசியாவுக்கு இடையிலான கடற் பயணப் பாதை இவ்வாறு தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டமை, அக்கால வர்த்தகத்தில் ஒரு புரட்சி ஏற்பட காரணமாகியது. பருவ மழையின் சாதகமான காற்றுக்களைப் பயன்படுத்தி புதிய பாதையைப் பின்பற்றிய முதல் மனிதராக இக் கப்பலின் தலைவன் ஹிப்பாலஸ் விளங்குகின்றான். இப் பருவக்காற்று பின்வந்த கடலோடிகளால் 'ஹிப்பாலஸ்' என அழைக்கப்பட்டு வந்தமை இதனாலேயே ஆகும்.

இக் காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னனான சாந்தமுகசிவன் இவ்வாறு புயலில் கரையொதுங்கிய இக் குழுவினரை நன்கு பராமரித்தான். (இம் மன்னன் கி.பி. 52 ஆம் ஆண்டில் அவனது சகோதரனால் பதவியில் இருந்து இறக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டான்.) ஆறு மாதங்கள் வரையில் இவ் அரசனின் பராமரிப்பில் இருந்த கிப்பாலஸ் தமிழ்மொழியைக் கற்றுச் சரளமாகப் பேசவும் பழகிக்கொண்டான். அதன் பின்னர் அரசனுடன் உரையாடிய அவன் ரோமாபுரியின் பெருமைகளையும், பேரரசர் கிளாடியஸ் சீசரின் ஆட்சி சிறப்புகளையும் அரசனுக்கு எடுத்துச் சொன்னான். அவனிடமிருந்த ரோம நாணயங்கள், அவற்றின் நிறையில் காணப்பட்ட ஒற்றுமை, பொறிக்கப்பட்டிருந்த பேரரசர்களின் உருவங்கள் மற்றும் ரோமன் நீதி பரிபலனத்தின் விஷேட தன்மை ஆகியவற்றில் அரசனுக்கு ஈடுபாடு மிகுந்தது. எனவே, ரோமாபுரியுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தும் நோக்கில் நான்கு தூதர்களை ரோமிற்கு அனுப்ப அரசர் முடிவு செய்தார். நான்கு தூதர்களும் ரோமானியர்களிடையே இலங்கையைப் பற்றி விளம்பரம் செய்வதற்கான வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

இலங்கையில் இருந்து வந்த நால்வருடன் அதிக நேரத்தைச் செலவிட முடியாமல் பேரரசர் கிளாடியஸ் சீசர், அவரது மூன்றாவது மனைவியான மெசலினாவின் துர்மரணம் போன்ற சில விடயங்களில் மிகவும் பரபரப்பாக இருந்தார். ஆனால் அவர்கள் புறக்கணிக்கப்படவில்லை. பிளினி அவர்களைச் சந்திக்காவிட்டாலும், பேரரசுக்குரிய அரண்மனையில் வேலைசெய்த தனது நண்பர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றார்.

## பிளினியின் குறிப்பில் இருந்து இலங்கை பற்றிய தகவல்கள் :

கடற்பயணத்தை மேற்கொள்ளும் தப்ரபானே மாலுமிகள் விண்மீன்களைப் பார்த்து திசை தெரிந்து கொள்வதில்லை. அவர்கள் தங்களுடன் பறவைகளைக் கொண்டுசெல்கிறார்கள். அவற்றைப் பறக்கவிட்டு, அவை செல்லும் திசையை வைத்து, அத் திசையில் நிலம் இருக்கிறது என்பதை அறிந்துகொள்கின்றனர். அதற்கேற்ப தமது கலங்களைச் செலுத்திக் கரையை அடைகின்றனர்.

தப்ரபனேயில் 500 நகரங்கள் இருக்கின்றன. பலீசிமுன்டஸ் என்னும் நகருக்கு அருகில் துறைமுகம் ஒன்று இருக்கிறது. இந் நகரம் அத் தீவிலேயே மிகவும் புகழ் பெற்றது. அங்குதான் அரசன் வசிக்கிறான். அந் நாட்டினுடைய மொத்த மக்கள் தொகை 200,000 ஆகும்.

இத் தீவுக்கு அருகில் உள்ள இந்தியப் பகுதி கோலியகம் (கோடிமுனை) என்ற முனையாகும். இக் கோலியகத்திற்கும் தப்ரபானேக்கும் இடையில் கதிரவன் தீவு இருக்கிறது. அந்த இடத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் கடல் நீருக்கு அடியில் ஏராளமான மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அதனால் அங்கெல்லாம் கடலின் நிறம் மிகவும் பச்சையாய் இருக்கிறது. கப்பலின் சுக்கான்கள் தாக்குவதால், அடியிலுள்ள மரங்களின் உச்சிக் கிளைகள் ஒடிந்து போவது அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சியாய் இருக்கிறது.

ஹெமோடி மலைக்கு (இமய மலைத் தொடராய் இருக்கலாம்.) அப்பால் செரஸ் (சீனா) நாடு இருக்கிறது. செரஸ் மக்களோடு அத் தீவுக்கு வணிகத் தொடர்பு காணப்படுகின்றது. தூதுக் குழுவிற்குத் தலைமைதாங்கி வந்த ரச்சியாவின் தந்தை செரஸ் நாட்டுக்குப் பலமுறை சென்றிருக்கிறார். அவ்வாறு செல்கின்ற பயணிகள் செரஸ் நாட்டை அடைந்ததும், செரஸ் மக்கள் அவர்களை வரவேற்கிறார்கள். அவர்களுடைய மயிரும் கண்ணும் மஞ்சள் நிறமாய் இருக்கின்றன.

தப்ரபானே பிற நாடுகளில் இருந்து இயற்கையாகவே தனித்திருக்கிறது என்றாலும், அங்கும் மக்கள் சுகபோக வாழ்க்கையை விரும்பத்தான் செய்கிறார்கள். அவர்களும் பொன்னையும் வெள்ளியையும் உயர்வாக மதிக்கிறார்கள். பளிங்குக் கற்கள் அவர்கள் நாட்டில் இயற்கையாகக் கிடைக்கின்றன. மேலும் அங்கு முத்தும் மணியும் இருக்கின்றன. அவர்களுடைய இன்ப வாழ்க்கைப் பொருட்கள் நம் நாட்டுச் சுகபோகப் பொருட்களைக் காட்டிலும் சிறந்தவை. அவை அங்கு ஏராளமாய் இருக்கின்றன. ஆனால், செல்வச் செழிப்பால் அடையக்கூடிய இன்பக் கலையில் அவர்களை விடவும் நாம் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

அந்தத் தீவில் அடிமைகள் இல்லை. மக்கள் சூரியன் உதிப்பதற்கு முன்னரே எழுந்து விடுகின்றார்கள். பகலில் அவர்கள் தூங்குவதில்லை. அவர்களின் வீடுகள் தரை மட்டத்தில் இருந்து ஓரளவுதான் உயரமாய் இருக்கின்றன. தானிய விலையை யாரும் ஏற்றுவதேயில்லை. அம் மக்கள் அரேபியர்களைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

விழாக்கள் போன்ற மகிழ்ச்சி நிரம்பிய நாட்களில் மக்கள் வேட்டையாடப் போய்விடுவார்கள். புலி வேட்டையும் யானை வேட்டையும் அவர்களுக்கு மிகவும் பிடித்தவை. மக்கள் நிலத்தை நன்றாக உழுகிறார்கள். அவர்கள் திராட்சை பயிரிடுவதில்லை. ஆனால், பிற பழங்கள் ஏராளமாய் விளைகின்றன. மீன் பிடிப்பதில் மக்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆமைகளைப் பிடிப்பதென்றால் அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவை மிகப் பெரியவையாய் இருப்பதால், அவற்றின் ஓட்டின் கீழ் ஒரு குடும்பமே இருக்க முடியும். நூறு ஆண்டுகள் உயிர்வாழ்வது என்பது ஒன்றும் அவர்களுக்கு அசாதாரணமான விடயம் இல்லை. இவையே தப்ரபானேயைப் பற்றி நாம் அறிந்துகொண்ட செய்திகள் ஆகும். □



# அஞ்சலி

மட்டக்களப்பை பிறப்பிடமாக கொண்ட கவிஞர் வே.கருணாநிதி அமெரிக்காவில் 11.11.2025 இல் காலமானார்.

கலாபூசணம் ஆ.மு.சி.வேலழகனின் மகனான கருணாநிதி 1985 இல் கீழைக்காற்று எனும் கவிதை நூலினை தந்தவர். சென்னையில் தி பாக்கர் அச்சகம், பதிப்பகம் (இளவழகன் பதிப்பகம்) நிறுவி 450 நூல்களினை வடிவமைத்து பதிப்பித்தவர். பல ஆய்வறிஞர்களின் நூல்களும் அவற்றில் அடங்கும். திருவருட்பா முழுவதும் பதினொரு பாகங்களாக தி பாக்கர் வெளியீடாக பதிப்பிக்கப்பட்டுள்ளன. தந்தை யாரின் நூல்களையும் ஈழத்து ஆய்வாளர்களின் நூல்களையும் பதிப்பித்துள்ளார்

மூன்று ஆண்டுகள் கோமா நிலையில் இருந்த அவரது மறைவுக்கு எங்கள் முற்றம் தனது அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

கவிதை

# அப்பன் காலம்

இணுவையூர் இலட்சுமிபுத்திரன்

எனது தந்தை
காட்டு வைரவர் வேள்வியில்
இருநூறு ரூபாய்க்கு
ஆட்டுக்கடா எடுத்துவந்து
ஏழெட்டு பிள்ளை கொண்ட
ஆறேழு குடும்பங்கள்
பங்குபோட்டு பிரித்து
இரண்டு மூன்று நாளைக்கு
வயிறு நிறையச் சாப்பிட்ட
குளிரூட்டியில்லாக் காலமது.

எனது காலம்
நான்கு பிள்ளைகள்
அதிலிரண்டு கர்ப்பிணிகள்

தெருவோரம் பளபளப்பான
கண்சிமிட்டும் மாதுளை
தாய் சேய்க்கு நல்லதென்று
நானறிவேன் நாள் குறித்தேன்.

விளம்பரப் படமொன்று
பதினையாயிரம் ஒப்பந்தம்
அதைநம்பி ஏற்கனவே
ஏழாயிரம் கடன்.

படப்பிடிப்புக்கு அடுத்தநாள்
அண்ணன் மகன் புதுவீடு
இரண்டாயிரம் போச்சு.

மோட்டார் சயிக்கிள்
இப்போ சில நாளாய்
பெற்றோல் மணக்கிறது
தொட்டால்...

தொட்டேன்
அது தொட்டு
அடுத்தடுத்து
இரண்டாயிரம் துட்டு
போனது கைவிட்டு.

நான் பெற்ற பாக்கியம்
நாலு பிள்ளைகளும்
நம்மோடு அடுத்தடுத்த வீதிகளில்
எட்டுப் பேரப்பிள்ளை
எல்லாம
எட்டாம் வகுப்புக்கு கீழ்.

மூன்று மாதுளைகள்
ஆயிரம் ரூபா
ஆர்தின்னக் காணுமது.

தனித்தொழித்து வைத்ததனை
தான்தான் தின்னப் பார்ப்பார்கள்
இரண்டாயிரம் போச்சு.

இன்றோடு போகட்டும்
இந்தத் தரித்திரம்
அப்பன் காலத்து அந்தநாள் வாழ்வு இனி
எந்தநாள் மீண்டு வரும்!



மூத்தோர்
படையல்

# இங்கிருந்து எங்கே?



*பேராசிரியர் க. கைலாசபதி*

இலக்கிய உலகிலே காலத்துக்குக்காலம் புதிய பிரச்சினைகள் தோன்றுவதுண்டு. அதேபோல, காலங்காலமாக எழுப்பப்படும் சில வினாக்களும் உண்டு. அத்தகைய நித்தியமான வினாக்களில் ஒன்று, 'இலக்கியம் எதற்காக' என்பதாகும். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இவ்வினாவிற்கு வேறுபடும் விடைகள் அளிக்கப்படலாம். ஆயினும் இலக்கியம் சம்பந்தமான அடிப்படைக் கேள்விகளில் மேலே குறிப்பிட்டதும் ஒன்றாகும்.

இலக்கியத்தின் குறிக்கோள் பற்றிக் கருத்து ரீதியாக விடைகூறுவதிலும் பார்க்க, இலக்கிய கர்த்தாக் களின் நோக்கையும் போக்கையும் விவரிப்பதனால் விளக்கம் தேடுதல் விரும்பத்தக்கதாகும். தனிப்பட்ட ஒரு எழுத்தாளன் காதல், புகழ், பணம், சமய நம்பிக்கை, அரசியல் ஈடுபாடு முதலிய பல்வேறு காரணங்களில் ஒன்றோ பலவோ உந்துவதால் எழுதுகிறான் எனக் கூறலாம். எனினும் எழுத்தாளரைப் பொதுவாக நோக்குமிடத்து மூன்று நிலைப்பாடுகளைக் கவனிக்கலாம்.

எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப்பிராணி . சமுதாயத்தில் எல்லாக் காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும், இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான். இந்நிலையில் மூன்று நிலைப்பாடுகளைப் பொதுவாக எழுத்தாளரிடையே காணக்கூடியதாய் உள்ளது.

ஒரு பிரிவினர். பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் துன்ப துயரங்களையும் எதிர் நோக்காதவராய், அவற்றுடன் சம்பந்தப்படாமல், இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க்கொண்டு அதற்கியையக் கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும் உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர்கள். இவர்களிற் சிலர் கூறும் வாதம் சுவையானது. 'வாழ்க்கை பலருக்குத் துன்பமயமாயுள்ளது என்பதை நாமும் அறிவோம். எனவே துன்பமயமாயமைந்த வாழ்க்கைக்கு மேலும் துயர் கூட்டுவதுபோல, சஞ்சலத்தையும், அவலத்தையும், அருவருப்பையும் இலக்கியத்தில் எதற்காகப் புகுத்த வேண்டும்? ஆகவே, துன்பத்தின் மத்தியில் துளிநேர மாற்றத்தை அளிப்பதாய், கற்பனையிலேனும் களிப்பையும் கவர்ச்சியையும் நாம் கொடுத்து உதவ விரும்புகிறோம்; முயல்கிறோம்" இவ்வாறு அவர்கள் தமது நிலைப்பாட்டிற்குச் சமாதானமும் விளக்கமும் கூறுவர். நடைமுறையில் பெருவணிக நிறுவனங்களின குரலாகவே இது இருப்பதைக் கண்டு கொள்ள அதிகநேரம் பிடிக்காது. தென்னிந்தியாவில் பெரும் தொழில் துறையாக வளர்ந்துள்ள சினிமா இத்தகைய வாதத்தின் துணையுடனேயே, அபினியாக மக்களுக்கு ஊட்டப் படுகிறது என்பதனை நாம் அறிவோம். பல லட்சக் கணக்கில் வெளியிடப்படும் குமுதம், ஆனந்தவிகடன் முதலிய சஞ்சிகைகளும் "துன்பப்படும் மக்களுக்கு மகிழ்வூட்டுவதற்காகவே" வெளிவருகின்றன எனக் கூறப்படுவதுண்டு. "எனது குறிக்கோள் மக்களை மகிழ்விப்பது ஒன்றே" என்றுதான் ஜெமினி அதிபரும் ஆனந்தவிகடன் வெளியீட்டாளருமான வாசன் எப்பொழுதும் கூறிவந்தார்.

இப்பிரிவினர் அனைவருமே பெருவணிகர் என்றோ, திட்டமிட்டு மக்களை ஏமாற்றிப் பணஞ் சம்பாதிப்போர் என்றோ நாம் கூறவேண்டுவதில்லை. இலக்கியம் தூய்மையானது, பேருணர்ச்சிகளுக்கு வாகனமாய் அமையவேண்டியது 'கற்பனை சார்ந்ததாய் இருக்க வேண்டியது என்று உண்மையாகவே நம்பும் எழுத்தாளரும் இருக்கக்கூடும்' எவ்வாறாயினும் சமூகப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்காமல் மானசீக உலகில் இருந்து கொண்டு எழுதுவோர் ஒரு பிரிவினர் எனலாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது, மன்னராட்சிக் காலங்களிலும், நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலும், பாராட்டப் பெற்ற 'அவை இலக்கியங்கள் இத்தகையன என்று பொதுப்படக் கூறலாம். குறிப்பாக உயர்மட்டத்தினரின் காதல் வாழ்க்கை, இன்பக்கேளிக்கை, உல்லாசப் பொழுதுபோக்கு, என்பவற்றை மையமாகக்கொண்டு எத்தனையோ சிற்றின்ப நூல்கள் தோன்றின. இவற்றின் மிச்ச சொச்சத்தை நவீன காலத்திலே ஐயத்துக்கிடமின்றி நாம் காணக்கூடுமாயினும், முதலாளித்துவ சமுதாயத்திலே,

வாழ்க்கையை முற்று முழுதாகப் புறக்கணிக்கும் இலக்கியங்கள் தோன்றுவது குறைவு என்றே கூறவேண்டும்.

இன்னொரு பிரிவினர், மேலே நாம் விவரித்த சமுதாய முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு நோக்கி அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பவர்கள். சமுதாயத்திலே பரவலாய்க் காணப்படும் துன்பதுயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அனுதாபத்துடன் பார்க்கும் இப்பிரிவினர், முந்திய பிரிவினரோடு ஒப்பு நோக்குமிடத்து தம்மைச் கற்றியுள்ள யதார்த்தத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. எனினும் சமுதாய நிலைமைகளைப் பிரதிபலித்தாலே போதும் என்னும் எண்ணம் இவர்களிற் பெரும்பாலானோரைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்பதிலும் ஐயமில்லை. அதாவது மூதற்பிரிவினர் பிரச்சினைகள் இருப்பதையே எழுத்தில் பிரதிபலிக்கவில்லை; அதனால் அப்பிரச்சினை இலக்கியத்துக்கு உகந்த – உரிய – பொருள்கள் அல்ல என்னும் கருத்தைக் கொண்டவராய் உள்ளனர். இரண்டாவது பிரிவினரோ இதற்கு மாறாக, சமுதாயப்பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் தமது கடமை, அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்தரித்து விடுவதே என்று கருதுகின்றனர். காலப் போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கையும் இவர்களுக்குண்டு.

வரலாற்று அடிப்படையில் நோக்கும் பொழுது, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தையடுத்து வந்துள்ள முதலாளித்துவ சமுதாய அமைப்பில், சந்தைக்குப் பொருள் தயாரிப்போருள் ஒருவனாக மாற்றப்பட்டுள்ள எழுத்தாளன், வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையில் வேலைத் தட்டுப்பாடு, மோசடி, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் முதலிய கொடுமைகளை அநுபவரீதியாகவும், அறிவு ரீதியாகவும் ஓரளவு கண்டு அவற்றை இலக்கியத்திலும் பிரதிபலிக்கிறான். ஆயினும் இவற்றையெல்லாம், அவன் எழுத்தாளன் என்னும் வகையில் தனிப்பட்ட முறையிலும், தனிப்பட்ட மாந்தரின் அவலங்களாகவுமே கண்டு எழுதுகிறான். இதன் விளைவாக துன்பதுயரங்களைக் கண்டு கண்ணீர் வடித்து. இரங்கி ஏங்கும் நிலைக்குப் பெரும்பாலும் அவன் தள்ளப்படுகிறான். யதார்த்தத்தைக் கண்டு மனம் நொந்து வெம்புகிறான்; சில சமயங்களில் சினங் கொண்டு சீறவும் செய்கிறான். எனினும் அதற்குமேல் அவன் நோக்குப் பெரும்பாலும் போவதில்லை.

நவீன உலகிலே பரவலாகப் பொதுமைச் சிந்தனைகளும், சோஷலிசக்கருத்துக்களும் நிலவுவதால் அவற்றாலும் இரண்டாம் பிரிவு எழுத்தாளர்கள் சிலர் ஈர்க்கப்படுவதுண்டு. எனினும்



அவர்களிடத்தும், இலக்கியத்தைப் 'பிரச்சார' மாக்குதல் கூடாது என்னும் சில ஐயங்களும், அச்சங்களும் ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காணலாம்.

பல்வேறு வரலாற்றுக் காரணங்களினால், கடந்த கால்நூற்றாண்டு காலத்திலே, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இப்போக்கு கணிசமான தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது எனலாம்.

எனினும் சமீப காலத்தில் பல இளைஞர்களி டையே – குறிப்பாகக் கிராமப்பக்கங்களில் வாழும் எழுத்தாளர்களிடையே பிரச்சினைகளை இன்னும் நுணுக்கமாகவும், தூலமாகவும் ஆராய்ந்து, அவற் றுக்குப் பரிகாரம் கூறும் இலக்கியப் படைப்புக்கள் வேண்டும் என்னும் கருத்து வேகம் பெற்று வருதலைக் கவனிக்கக் கூடியதாய் உள்ளது. இதற்குத் தருக்க ரீதி யான காரணங்களும் இல்லாமல் இல்லை. மனிதாபிமான உணர்வுடன் நடைமுறைப் பிரச்சினைகளைச் சித்தி ரித்தல் ஏற்றதே என்னும் கோட்பாடு ஓரளவு வழக்காகிய பின், அடுத்து என்ன? என்னும் வினா எழுதல் இயல்பே. அது மட்டுமன்று, பிரச்சினைகளை மேலும் மேலும் கூர்ந்து நோக்கி, ஒவ்வொன்றினதும் காரணகாரியத் தொடர்புகளை விளங்கிக்கொண்டு, எழுதும் போது அவற்றை நீக்கவேண்டிய அவசியத்தையும் அதற்கான வழிவகைகளையும் விவரித்தல் தவிர்க்க இயலாததே.



நோயை நுணுக்கமாக விளங்கி விவரித்தால் மட்டும் போதுமா? நோயாளியின் மீது இரக்கப்பட்டால் மட்டும் போதுமா? நோயின் வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறினால் மட்டும் போதுமா? நோய் தீர மருந்தும் மார்க்கமும் வேண்டாமா?

இன்னும் ஒரு காரணமும் உண்டு. ஒரு காலகட்டத்தில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் புதுமையின் பெயரிலும் புரட்சியின் பெயரிலும் இலக்கியத்தில் புகுத்திய பொருள்களும் சித்திரிப்பு முறைகளும் இன்று வர்த்தக வெளியீடுகளி லும் சாதாரணமாக இடம்பெறத் தக்கவையாகிவிட்டன. 'அரங்கேற்றம்' போன்ற திரைப்படமும் யதார்த்தப் படைப்பு எனப் பலர் கருதுமளவிற்கு பொருள் எடுத்தாளப்படுகிறது. அதாவது, இனங்காண்பது கடினமாகிவிட்டது எனலாம்.

இந்நிலையில், சமுதாயத்திற் காணப்படும் முரண்பாடுகளையும், துன்ப துயரங்களையும், போராட்டங்களையும் உதிரியான தனி மனிதர்களின் பிரச்சினைகளாக மாத்திரம் கண்டு காட்டாமல் அவற்றை வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டத்தின் வெளிப்பாடுகளாகக் காண்பது இன்றியமையாததாகிறது. இரண்டாவது பிரிவிலே தொடங்கியபோதும், வர்க்க அடிப்படையிலே பாத்திரங்களை அணுகாமல், விசேஷமான தனிப்பிறவிகளை இலக்கிய மாந்தராகக் கொண்டமையாலேயே, ஒரு காலத்து 'முற்போக்கு'' எழுத்தாளர் ஜெயகாந்தன், இன்று பிரம்மோபதேசம்' செய்பவராக உருமாறியுள்ளார். இது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனது தனிப்பட்ட பலவீனம் மட்டுமன்று அவன் பற்றிக் கொண்டிருந்த இலக்கியக் கோட்பாட்டிலே உள்ளார்ந்த பலவீனமாய் இருந்த அம்சத்தின் பரிணாமம் என்றும் கூறலாமல்லவா? ஜெயகாந்தனை விதிவிலக்கான வில்லனாக' நாம்விவரிக்க வேண்டிய தில்லை. பல எழுத்தாளர்களைப் பிரதிநித்துவப் படுத்தும் எடுத்துக்காட்டு என்றே கொள்ளவேண்டும். வர்க்க ஆய்வின் அடிப்படையில், தூலமான சந்தர்ப்பங்களில் பாத்திரங்களைச் சித்தரிக்கத் தவறும் எந்த எழுத் தாளனும் ஜெயகாந்தன் ஆவதற்கு அதிக நாள் பிடிக்காது.

இதை இன்னொரு வகையாகவும் நோக்கலாம். ஜெயக்காந்தனது எழுத்தில் இன்றும் நுணுக்க விவரங்களைக் கூறும் "யதார்த்தப் பண்பு, அதாவது இயற்கையாகப் பாத்திரங்களைத் தீட்டும் ஆற்றல் குறைவின்றியே இருக்கிறது. மனிதாபிமான உணர்வும் இல்லையென்று அடித்துக் கூறவியலாது. ஆயினும் சமுதாய மாற்றத்துக்கு ஆதரவு தருபவராக அவர் இன்று இல்லை. எனவே பிழை எங்கே உள்ளது என்று கவனமாய்த் தேடவேண்டும்.

இந்த இடத்திலேதான் மூன்றாவது பிரிவினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, அதனை மாற்றி அமைக்கும் பணியில் பங்குபற்றுவதுடன், அப்பணி வெற்றிபெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக் கொள்வதும் இன்றைய தேவையாகும் என இப்பிரிவினர் வற்புறுத்துகின்றனர். இவ்வாதத்தை இலகுவில் ஒதுக்கி விடமுடியாது. அநுபவமும். அனைத்துலகப் போக்கும் இவ்வாதத்துக்கு அரண் செய்வனவாகவே உள்ளன.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது, தொழிலாளர்,விவசாயிகள் வர்க்கத்திலிருந்து தோன்றும் கலையிலக்கியக் கோட்பாட்டின் காத்திரமான குரல் இது என்பது வெளிப்படை. எதிர்காலத்தை மாற்றியமைக்கும் பெரும்பணிக்கு அவர்கள் தலைமை தாங்குபவர்கள் ஆதலின் அக்குரல் வலிமையுடையது என்பதில் ஐயமில்லை. இக்கோட்பாடு இலக்கியத்தில் செயற்படுகையில் சிறப்பான பிரச்சினைகள் தோன்றும் என்பது உண்மை. கலையழகு, உருவம், நம்பகத்தன்மை, ஏற்புடைமை, மொழி நயம் முதலிய பல்வேறு அம்சங்கள் இணைதல் வேண்டும். புதிய நெறிமுறைகள் வகுக்கப்படல் வேண்டும். ஆயினும் இவை எதிர்நோக்க வேண்டிய சவால்களே. இந்தக் காலகட்டத்தில் இன்று ஈழத்து எழுத்தாளர்கள் வந்து நிற்கின்றனர். தருக்கரீதியாக வளர்ந்து வந்துள்ள இப்போக்கைத் தக்கபடி முன்னெடுத்துச் செல்வதிலேயே எமது எதிர்காலம் தங்கியுள்ளது.

*நன்றி: தாயகம் 1974* ☐

மூத்தோர்
படையல்



# ஓ! யாது? ஓயாது!!

*கல்வயல் வே. குமாரசாமி*

ஓ! யாது? என் றென்றே
ஒலியெழுப்பிக் கேட்கின்ற
ஓயாத சத்தமது
ஒன்றாகிக் கூடுகுது

காயாத மரங்களெனக்
கலங்குகின்ற ஏழைகளின்
கல்லடைசல் வாழ்க்கையினை
நன்னிலைக்குச் செல்லவைக்கும்

நேயக் கயிறதனின்
நெடுந்தொடர்ச்சி நீளுகுது
நாளும் உழைத்தலுத்து
நலன்காணா மக்களுக்கு

தூயவழி வருகின்ற
சாயலினைக் கண்ட எங்கள்
தொன்மைத் திறன்திரண்ட
தோள்வலிமை ஓயாது

... காமத்தின் நெடிபரவிக்
காதலெனும் பேருடனே
காலநெடும் பரப்பிற்
கட்டவிழ அச்சமின்றிப்

பாமரரிற் கேவலமாய்ப்
படித்தறிந்த பாவியர்கள்
போகின்ற மோகவெறி
வேகத்தைச் சிந்தனையின்

பூமலர உந்தியெழும்
புத்தெழுச்சிப் பாக்களது
போதை உலகத்துப்
பாதை முழுதும்பரவி

தீமைகளை மாய்க்கும்வரை
திண்டாட்டம் தீரும்வரை
தீராது நம்வேகம்
தீரமது ஓயாது

பேச்சளவில் இன்றுலகம்
காற்றிடையிற் காவோலை
போற்சலனம் எழுப்பலின்றி
ஆற்றும் பணியேது?

சீச்சீச்சீ என்ன இவர்
சின்னத் தனமாகக்
கூச்சமின்றி வார்த்தைகளை
கொட்டுகிறார் என்றாலும்

நோச்ச கருக்களையும்
நூறுநூ றாண்டுகளாய்ப்
போட்டடித்த னபற்றிப்
புளுகுகின்ற பொய்யர்களின்

கூச்சல் ஒழிந்து
தெளிந்த செழுந்தமிழில்
ஆக்கம் மிளிரும்வரை
அறிவுணர்ச்சி ஓயாது!



நன்றி: கல்வயல் வே. குமாரசாமி கவிதைகள்

சிறுகதை

# ஞாபகங்கள்

*செல்லத்துரை ஜெயராசா*



சிறியதொரு கொட்டில் கடை தெரிந்தது. ஒரு மண் பானையில் மோர் என்று பெரிதாக எழுதப்பட்டிருந்தது. வெயில் வெக்கைக்கு மோர் ஒரு கிளாஸ் குடித்தால் நன்றாக இருக்குமென்று நினைத்த நான் மோட்டார் சைக்கிளை வீதியோமாக நிறுத்திவிட்டு அடுத்த பக்கத்தில் இருந்த கடைக்குச் சென்றேன். பின் பக்க வளவைப் பார்த்துக்கொண்டு ஒருத்தி நின்றாள். சிறு பெண்பிள்ளை ஒன்று இன்னொருபுறம் பார்த்துக் கொண்டு நின்றது. கடையில் வெற்றிலைச் சுருள்கள் கச்சான் பைகள், வாழைப்பழச்சீப்புகளும் இருந்தன. நான் அருகில் சென்றதும் அவள் திரும்பினாள்.

"ஒரு மோர்" என்று கேட்டேன். அவளை எங்கேயோ பார்த்ததாக ஞாபகம்.

மோர்ப்பானையைத் திறந்து ஒரு அகப்பையால் மோரைக் கலக்கிவிட்டு ஒரு கிளாசில் ஊற்றினாள். ஒதுக்கி வைத்திருந்த வெங்காயம், பச்சை மிளகாயை ஒரு கரண்டியால் எடுத்து மோரில் போட்டு கலக்கித் தந்தாள். தலையில் அணிந்திருந்த 'கெல்மற்' ரைக் கழற்றி சாமான்கள் வைத்திருந்த தட்டின் ஒருபுறம் வைத்தவிட்டு வாங்கினேன்.

"சேர்..."என்று ஆச்சரியமாக விழித்த அவள் "நீங்களா" என முடித்தாள்.

அவளுடன் நின்ற பிள்ளையும் திரும்பிப் பார்த்தது. ஒரு ஒன்பது பத்து வயதிருக்கும். நடு உச்சி வகுந்து இரட்டைப் பின்னல் போட்டிருந்தாள். துருதுரு என்று வட்டமான கண்கள் அவளை உறுதிப்படுத்தியது.

"நீ..." என்று இழுத்தேன். நான் சொல்லமுதல் "நான் ஜானகி சேர்" என்று தன் பெயரைச் சொன்னாள். அவளின் சிறிய வயது உருவம் மகளைப் போலவே. அவளின் உருவச் செயல்பாடு எல்லாம் என் மனத்திரையில் நிழலிட்டது.

"என்ன இங்க நிற்கிறீர்..."

"இது இவற்றை இடம். அதுதான் வீடு" என பின்னே இருந்த வீட்டைக் காட்டினாள்.

பார்த்தேன்.

"குடியுங்கோ சேர்."

குடித்துக்கொண்டே நோட்டம் விட்டேன்.

வீதியில் இருந்து நூறுமீற்றர் தூரத்தில் ஒரு வீடு தெரிந்தது. சீற்போட்ட வீடு. இரண்டு அறையும் விறாந்தையும் இருக்கலாம். அருகே குசினி. மண்ணால் சுவர் வைத்து கிடுகால் வேயப்பட்டிருந்தது. முற்றத்தில் மாமரமும் பலாமரமும் நின்றன. வீட்டுக்குப் போகும் பாதையள் இருபுறமும் கமுகமரங்கள். வளவின் அடுத்த பக்கத்தில் தென்னை மரங்கள். இடையில் இருந்த நிலம் புல் மண்டிக்கிடக்கின்றது. ஐந்தாறு ஆடுகள் புல்

மேய்ந்துகொண்டிருக்கின்றன. குடித்த மோர்க்கிளாஸை தட்டில் வைத்தேன்.

"அப்போ அவர் என்ன செய்யிறார்."

சிறிது தாமதித்தவள்,

"கமம்தான் சேர். இப்ப இல்லை... அவர்...அவர்... ஆறு மாசத்துக்குமுதல் போய்ச் சேர்ந்திட்டார். கிட்னி வருத்தம்."

கண்கள் கலங்கின. அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இருவருக்கிடையிலும் மௌனம்.

"பிள்ளை நான் அவரை ஞாபகப்படுத்தி கவலைப்படுத்திப் போட்டன். மன்னிச்சுக்கொள்..."

"இல்லை சேர். ஞாபகப்படுத்தத்தானே வேணும். சந்தோசமான நேரத்திலா நினைப்பு. கவலையான நேரத்திலும் நினைக்கத்தானே வேணும்." பேச்சை நிறுத்திவிட்டாள். இருவரும் பேசவில்லை. மௌனம். அவள் சந்தோசமான தருணங்களையோ துக்ககரமான தருணங்களையோ நினைத்திருக்கலாம். ஒரு முடிவுக்கு வந்தவளாக முயலுவதாக அவள் தொண்டை நரம்புகள் விம்மித்தணிந்தன.

கணவனுமில்லை; குடும்பத்தை எப்படிக் கொண்டுபோவாள். எப்படிக் குடும்பச் சுமையைத் தாங்குகிறாள் என்று கேட்க மனம் ஏவியது. நா எழவில்லை.

"எப்படி குடும்பத்தைக் கொண்டு நடத்திறாய் எண்டு நினைப்பியள்" என்று சொல்லி மௌனத்தைக் கலைத்து தொடர்ந்தாள்.

அதற்கிடையில் "பிள்ளை வெத்திலைச் சுருள் ஒண்டு" பெரியவர் ஒருவர் கேட்டு வாங்கினார்.

"சேர், தோட்டம் ஆடுமாடு எண்டு வருமானம் வந்திது. பிரயாசைப்பட்டம். வீட்டைப் பெரிசாக்குவம் எண்டு காசைச் சேத்தம். ஆனா அவற்றை வருத்தோடு காசும் போச்சுது. அவரும் போயிட்டார்."

குரல் தளதளத்தது. சுதாகரித்துக்கொண்டு தொடர்ந்தாள்.

"சேர், எந்தத் தொழிலும் நல்ல தொழில்தான். உயர்வு தாழ்வு இல்லை. ஒண்டோடை ஒண்டு பின்னிப் பிணைஞ்சதுதான் சமுதாயம். செய்யும் தொழில் தெய்வம். தொழிலை கள்ளமில்லாமல் செய்ய வேணும் எண்டு அப்ப... நாடகத்திலை வசனம் தந்தனீங்கள். இருபத்தைஞ்சு வருசத்துக்கு முந்தி. இல்லை இருபத்தாறு வருசம். நான் அப்ப நாலாம் வகுப்பு. மெக்கானிக்காக நடிச்சனான். நடிக்க வைச்சனீங்கள்" என்று சொன்னாள்.

"ம்... ம் ஞாபகமிருக்கு."

"சேர் இப்ப 10 மாடுகள் வளக்கிறன். பால் விக்கிறன். ஆடுகளும் குட்டிகளும் ஒரு பதினைஞ்சு. ஊர்க் கோழியும் வளக்கிறன். மற்றது தேசிக்காய் பாக்கு விக்கிறன். வருமானம் பரவாயில்லை. இனித்தான் தோட்டம் சீர்செய்யவேணும். பிள்ளையள் இரண்டு. ஒண்டு இவள். இன்னொருவர் தம்பி. இரண்டாம் ஆண்டு படிக்கிறார். படிப்பினம். பெரியம்மா பின்னேரம் வருவா. அவவுக்கு என்னாலை கரைச்சல். பெருமூச்சுவிட்டாள். பெத்தது வெளிநாடு போச்சுது. ஒருதடவை வந்து போச்சுது. பிறகு தொடர்பில்லை. அப்பனும் போட்டான்." வெறுப்போடு பேசினாள்.

"என்னாலை பெரியம்மாவுக்குத் தான் கரைச்சல். அவ என்னிலை நேசம். ஓஎல் வரை படிப்பிச்சவ. மூண்டு பாடமும் பாஸ். திரும்ப எடுக்கேல்லை. பிள்ளையளுக்கு ரியூசன் குடுத்தன். பிறகு பெரியம்மா நல்ல பொடியன் எண்டு பேசி கலியாணம் கட்டி வச்சா. சந்தோசமாக வாழ்ந்தம்." பெரிய பாரத்தை இறக்கி வைச்சமாதிரி பெருமூச்சு விட்டாள்.

"சேர், உங்களை நினைச்சுக் கொள்ளுவன். நாடகம் பாக்கிறநேரம், காயம் படுகின்ற நேரம் தவறாமல் உங்கடை நினைவு வரும். உங்கள கண்டது சந்தோசம்" மகிழ்வாக சிரித்தாள். அவள் 'சேட்டுவிக்கற்' தந்தது மனசுக்கு மகிழ்வாக இருந்தது.

"அக்கா கச்சான்" எண்டு காசைக் கொடுத்தான். எனக்கும் இரண்டு பைக்கற் என்றேன். இரண்டை எடுத்து ஒரு சொப்பினில் போட்டு வைத்தாள்.

"சுவீற்றி இவர் எங்கடை சேர். நாலாம் ஆண்டு படிப்பிச்சவர்" மகளுக்குச் சொன்னாள். அவளும் "ஆங்..." என ஆச்சரியமாகப் பார்த்துச் சிரித்தாள்.

"ஒருக்கால் வீட்டுக்கு வாருங்கோவன் சேர்."

சுந்தரம் அண்ணை தன்ரை மகளின்ரை கல்யாண விசயமாக அவசரமாக வரச் சொன்னவை என்ற ஞாபகம் வந்தது.

"இல்லைப்பிள்ளை அவசரமாக போகவேண்டியிருக்கு. பிறகு ஒரு நாளைக்கு வாறன்."

"இரண்டு கச்சான் ஒரு மோர்" காசைக் கொடுத்தேன்.

"வேண்டாம் சேர்."

"இல்லை யாவாரம் யாவாரமாய் இருக்க வேணும் பிள்ளை. அறிஞ்சவை தெரிஞ்சவை எண்டு குடுத்தா

முதலே போவிடும்" என்று சொல்லி வில்லங்கமாக காசைக் கொடுத்தேன்.

'பாக்' ஐ எடுத்துக்கொண்டு வீதியின் மறுபுறத்தில் நின்ற மோட்டார் சைக்கிளடிக்குப் போய் கான்டில் கண்ணாடியில் கொழுவிவிட்டு மோட்டார் சைக்கிளை முடுக்கிக் கொண்டு புறப்படுகிறேன்.

மீண்டும் அவளின் நினைவு. அவள் வீட்டுக்கு அழைத்தபோதுபோயிருக்க வேணும். என்ன நினைக்கிறாளோ தெரியவில்லை. ஒருவேளை தன்னைக் குறைவாக நினைச்சுத்தான் வரவில்லை என்று நினைப்பாளோ. படிக்கிற காலத்திலை ஒருநாள் அவள் சொன்னாள். "சேர் சேர் குமுதினி தானே உங்களுக்குப் பிள்ளை. அவவோடைதானே நீங்கள் நேசம்..." என இழுத்தாள்.

"இல்லைப் பிள்ளையள். நான் எல்லாரிலையும் நேசம். அப்படி ஏன் சொல்லுறீர்" நான் பேதம் காட்டுறேனா என மனதுக்குள் ஒரு நெருடல். அவளின் எண்ணத்தை அறியக் கேட்டேன்.

"அவா உங்கடை கதிரையைப் பிடிச்சு ஆட்டுறா. ஆடுறா. உங்கடை தோளிலையும் கை வைக்கிறா. உங்கடை கண்ணாடியைக் கூட கழட்டுறா."

அவளுடைய எண்ணம் சரியானதுதான்.

"பிள்ளையள் நீங்கள் எல்லோரும் என்ர பிள்ளையள்தான். நான் ஓய்வாக இருக்கிற நேரம் நீங்கள் தாராளமாக என்னோடை விளையாடலாம்" என்று சொன்னேன. அவளைப் பார்த்தேன்.

அவள் வலமும் இடமும் தலையைத் திரும்பி தன் சட்டையைப் பார்க்கிறாள். தன்னுடைய தலையில் உச்சி பிரித்ததை கை வைத்துப் பார்க்கின்றாள். திருப்தி இல்லை. தலை குனிந்தாள். மங்கிய கசங்கிய சட்டை. சரியாக வாரப்படாத தலை.."

குமுதினி தூய வெள்ளைச் சீருடை. பொலிஸ் பண்ணிய சப்பாத்து. நடு உச்சி பிரித்து இரட்டை பின்னல் மடித்துக் கட்டியபடி. அதற்குள்ளே சிறிய பூக்கள் இரண்டு. நெற்றியிலே ஒற்றைத் திருநீற்றுக் குறி. அவளது தாய் நன்றாக தயார்ப்படுத்தி அனுப்புவாள்

இவளுடைய தாய் வெளிநாட்டு வேலைக்குப் போய்விட்டாள். தன்னுடைய குடும்பத்தை சிறப்பாக்கும் எண்ணத்துடன். குடும்ப நிர்வாகத்தை தகப்பன் பொறுப்பெடுத்துக் கொண்டார். ஆனால் நடத்தை பொறுப்பாக இல்லை.

இன்னொரு நாள் வீட்டுப் பாடக் கொப்பிகளை அடுக்குமாறு கூறினேன். மாணவர்கள் கொண்டுவந்து கொப்பிகளை அடுக்கினர். "யார் இன்னும் கொப்பி வைக்கேல்லை." இவள் தயங்கித் தயங்கி எழும்புகிறாள்.

"இரண்டு நாள் லீவு. வீட்டுப்பாடம் செய்ய களவு" பிரம்பை எடுக்கிறேன். கையை நீட்டுகிறாள். உள்ளங்கையில் புண். பிரம்பு தானாக கீழே வருகிறது.

"என்ன நடந்தது?"

"நெருப்புச் சுட்டது. கை வலிக்குது. அதுதான் எழுதேல்லை."

"எப்பிடிச் சுட்டது?"

"காலைமை தேத்தண்ணி வைக்கவெண்டு சாம்பலை அள்ளினன். சாம்பலுக்குள்ள இருந்த நெருப்புச் சுட்டுப் போட்டுது."

"அப்பா?"

"இரவு வெறியில வருவார். காலமை எழும்ப மாட்டார். நான்தான் தேத்தண்ணி வைக்கிறது."

"சமயல் செய்யிறது?"

கண்ணீர் வந்தது. புறங்கையால் துடைத்து விட்டாள்.

"காலமை பாண் வாங்குவம். மத்தியானம் பள்ளிக்கூடத்திலை சாப்பிடுவம். இரவுக்கு ரொட்டி சுடுவன்."

இந்த வயசிலை தம்பி தங்கச்சியை பராமரிக்க வேண்டி இருந்தது அவளுக்கு. பொறுப்பில்லாத பெற்றோர். கவலையாக இருந்தது.

"ஏன் மருந்து கட்டேல்லை."

"அது மாறும். மருந்து கட்டத் தேவை இல்லை எண்டவர் அப்பா."

அவள் தயங்கினாள்.

"சரி வா கட்டுவம். பிள்ளையள் சத்தம் போடாமல் படியுங்கோ. வாறன்."

பிறகு ஒவ்வொரு நாளும் மருந்து கட்டினாள். அது மாறி விட்டது. இப்போது அவள் என்னோடு நெருங்கிப் பழகிறாள்.

"வறுமையைப் போக்க அம்மா வெளிநாடு போய் விட்டா. அம்மா போன கவலையில் அப்பா குடிக்கிறார். இவள் எல்லாத்துக்கும் பின் நிற்கிறாள்.

சிறுவர் தினம் வந்தது. அதுக்கு நாடகம் போடவேணும். நாடகத்துக்கு ஒத்திகை நடந்தது. செய்யிற தொழில் கொண்டு மனிதரை உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது. சமுதாயத்தை மேன்மைப்படுத்தும் தொழில்கள் அனைத்தும் உயர்ந்தவையே என்ற கருப் பொருள் கொண்டது. இவள் மெக்கானிக்காக நடித்தாள். நாடகத்துக்கு உடுப்பில்லை என்று கவலைப்பட்டாள்.

"பக்கத்திலை சொந்தக்காரப் பையன்கள் இருப்பாங்கள்தானே கேட்டு வாங்க ஏலாதோ."

"இல்லை சேர்" என்றுவெட்கப் பட்டுக் குனிந்தாள்.

"சரி. என்ர மகன்ர ஜீன்ஸ், ரீசேட், தொப்பி உனக்கு அளவாயிருக்கும். நாளைக்குக் கொண்டுவந்து தாறன்."

என்னைப் பார்த்துச் சிரித்தாள். அவளுக்குச் சந்தோசம்.

சிறுவர் தினம் நடந்தது. பெற்றோர், ஆசிரியர், மாணவர், ஊர் மக்கள், அதிகாரிகள் வந்திருந்தனர். நாடகம் பற்றிச் சிறப்பாகப் பாராட்டினர். மெக்கானிக் நடிப்பை மெச்சினர். இதைக் கேட்டு மகிழ பெற்றோர் தான் இல்லையே.

எனக்கு இடமாற்றம் வந்தது. பிரியாவிடை நிகழ்ச்சி நடந்தது. ஆசிரியர் மாணவர் பெற்றோர் என்னைப் பாராட்டிப் பேசினர்.

இவளும் ஒரு பாட்டுப் பாடினாள். அது நான் ஒரு நிகழ்ச்சியில் பாடிய சினிமாப்பாடல். "நல்லபேரை வாங்கவேண்டும் பிள்ளைகளே" என்ற பாடல்.

நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. இவள் ஓடிவந்து என் கையை தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு அழுதாள்.

அவள் கண்ணீரைத் துடைத்து தலையைத் தடவி ஆறுதல் கூறினேன்.

"நல்ல ரீச்சர்மார் இருக்கினம். கவனமாகப் படிக்கவேணும். பாடங்களைச் செய்யவேணும். தெரியாவிட்டால் கட்டாயம் கேட்க வேணும். சொல்கேட்டு நடக்கவேணும். ரீச்சர்மார் அன்பாய் இருப்பினம். நீ நல்லா வருவாய்" என்றேன். அழுகையை நிறுத்திவிட்டு என் காலைத் தொட்டு வணங்கினாள். தலையின் மீது கைவைத்து ஆசி வழங்கினேன்.

அப்போது தான் அவளைக் கடைசியாகப் பார்த்தது.

இந்த யோசனையில் நான் நண்பரின் வீட்டுக்குப் போகும் பாதையைக் கண்டவுடன் சடுதியாக மோட்டார் சைக்கிளைத் திருப்பினேன். பின்வந்த 'வான்' ஒன்று கிறீச் சென்று பிறேக்போட்டு நின்றது. ஒழுங்கை முகப்பில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். திரும்பிப் பார்த்தேன்.

"கிழடு காலத்துக்கு முன்னம் போறதுக்கு அடுக்குப் பாக்குது" என்று ஏசிவிட்டு வாகனத்தை எடுத்துச் சென்றான். நான்தான் சிக்னல்போடாமல் திரும்பிவிட்டேன். தப்பு என்னிலைதான். இனி கவனமாக போக வேணுமென்று புறப்படுகிறேன். □

---

விவாத மேடை

# தண்டிக்கப்படும் நியாயங்கள்

எமது மாணவர் சமுதாயத்தினர் நடந்துகொள்ளும் முறையினைப் பார்க்கும் போது பெற்றோர்களுக்கு மிகுந்த மனவேதனையும் விரக்தியும் ஏற்படுகிறது. அவ்வாறான நிலை ஏற்படுவதற்கு மாணவர்கள் மட்டுந்தான் காரணம் என்று முடிவு எடுக்க முடியாது. பெற்றோர்களும் இவ்விடயத்தில் முக்கிய பங்குதாரர்களே. காரணம், முந்தயகாலங்களில் பாலர் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரமாய் முழுப்பொறுப்பும் கொடுத்து அவர்களோடு சேர்ந்து பெற்றோர்களும் அனுசரணையாயிருந்தார்கள். மனச்சாட்சியுடன் பயிற்றுவித்து நற்பண்புள்ள பிரஜையாய் பிள்ளைகளை உருவாக்கும் ஆசிரியர்களை இப்போது புதிய சட்டங்களும், நடைமுறைகளும் கட்டிப்போட்டு வைத்திருக்கின்றன. இதில் பெரும் வேதனை எதுவென்றால், இவைகள் நூறு சதவீதம் சரியென்று போராடும் புரியாத சில பெற்றோர்களும் எமது சமூகத்தில் இருப்பதுதான்.

ஒரு பிள்ளையைக் கற்பித்து, நற்பண்புள்ள பண்பாளனாய் வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தும் தலையான கடமையில் பெரும்பங்கு நல் ஆசிரியர்களுக்கே உண்டு. ஆனால் தற்போதைய சட்டங்களின் துணிவுடன் தவறுதலாக ஏற்படும் சிறு பிழைகளுக்குக்கூட நல் ஆசிரியர்கள் பொலிஸார் மூலமாக சில வேளைகளில் நீதிமன்றம் வரை செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அங்கு குறித்த ஆசிரியர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு பலபேர் முன்னிலையில் அவமானப்படவும் நேரிடுகிறது. இந்தச் சட்டங்கள் மேலைத்தேய நாகரிகங்களுக்கு பொருத்தமானதாக இருக்கலாம். எமது நாட்டில் எதிர்காலத்தில் நன் மக்களாக பிள்ளைகள் உருவாகுவதற்கு இந்தச் சட்டத்தின் தீவிரத்தைக் குறைத்து மட்டுப்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. அப்படி இல்லாது, எடுத்ததற்கெல்லாம் ஆசிரியர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற மனப்பான்மையுடன் செயற்பட்டால் எதிர்காலத்தில் தான்தோன்றித்தனத்துடன் வளரும் பிள்ளைகளை பொலிசாரும், நீதித்துறையுமே தண்டிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் தாம் எங்கே தவறு விட்டோம் என்பதை சில பெற்றோர்கள் உணர்ந்துகொள்வார்கள. மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள ஆசிரியர்களுக்கான கட்டுப்பாடுகள் வருவதற்கு முன் எப்படி மாணவ சமுதாயம் முன்னேற்றகரமாக இருந்தார்கள் என்பதுவும், கட்டுப்பாடுகள் வந்த பின்னர் எப்படி பின்னோக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுவும் எல்லோரும் அறிந்த கசப்பான உண்மையே!

**இராமா (மார்க்கண்டு சிவநேசன்) – காரைநகர்**

**உங்கள் கருத்துகளைப் பதிவிடுங்கள்.**

பண்டைய மருத்துவ முறை

01

# மனித குலத்தின் நலமே மருத்துவ உலகின் நலம்



முனைவர் வா மு சே ஆண்டவர்

திருக்குறள் பல்துறை வாழ்வியல் நூல். பயிரியல், உயிரியல், விலங்கியல், பொறியியல், மாந்தவியல், சமூகவியல் என பல துறைகளின் மூல வித்துக்கள் திருக்குறளில் உள்ளன. மருத்துவவியல் தொடர்பாக திருவள்ளுவர் சொன்ன செய்திகள் இன்றையை நவீன மருத்துவ உலகம் வியக்கும் வண்ணம் உள்ளன. ஒரு குடம் தமிழ்ப்பாலில் முப்பால் கூறியுள்ள குறள் ஒன்றை சொல்லலாம்.

மருந்து என்ற 95 ஆம் அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு குறளிலும் மருத்துவ உலகிற்கு உயிர்ப்பான உவப்பான தனித்துவமான செய்திகள் கிடைக்கின்றன. மருந்து என்ற சொல்லுக்கு இணையான சொல் உண்டா! என ஆராய வேண்டும். DRUG & MEDICINE என்ற சொல்லுக்கு மருந்து என்பதனை இணையாகக் கூறமுடியாது. மருத்துவன் என்ற சொல்லும் இப்படித்தான்.

மருத்துவம் எவ்வாறு பார்க்கப்பட வேண்டும்.

01. மருத்துவர்
02. நோயாளர்
03. நோயாளர் வயது
04. நோயாளருக்கு நோய் பரவியுள்ள அளவு
05. காலம்

இந்த ஐந்தின் அடிப்படையில் மருத்துவம் செய்தல் வேண்டும் என்கிறார்.

நோயாளரின் நோயைக் குணப்படுத்தக்கூடிய மருத்துவர் நோய்க்கான சரியான மருந்தினை நோயாளரின் தன்மை அறிந்து சரியான மருந்தினை சரியான முறையில் உடம்பில் உட்செலுத்திகண்காணித்து நோயாளியின் விலை மதிப்பற்ற உயிரினை காப்பாற்ற வேண்டும். இத்தகைய முறையினை கடைப்பிடிக்காமல் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்து பல்வேறு வசதிகளுடன் மருத்துவமனைகளைக் கட்டினால் அவை மயானங்களாகத்தான் மாறும்.

*"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்"*

என்ற குறள் மூலமாக, கற்றான் பல மருத்துவத் துறையின் பல பட்டங்களைப் பெறுகிறார்கள். மருத்துவம் கற்றவர்கள் இதனை கருதவில்லை என்றால் அழிவுதான் ஏற்படும் என்கிறார் திருவள்ளுவர். நோய் என்னவென்று ஆராய வேண்டும். நோயை தீர்க்கும் வழிமுறைகளை ஆராய்ந்தே மருத்துவப்பணி செய்ய வேண்டும் என்கிறார். கல்வியும் மருத்துவமும் அன்றைக்கு மக்களுக்கு சேவை அடிப்படையில் வழங்கப்பட்டது. மக்கள் மருத்துவமனையை தர்ம ஆஸ்பத்திரி என்றே சொல்லுவார்கள். இன்றைக்கு அதர்மமாக கல்வியும் மருத்துவமும் வணிக மயமாகி மனித குலத்தின் அறத்திற்கு எதிராக உள்ளன.

பண்டைய மருத்துவத்தின் தந்தையாக ஆச்சார்யா சரகர் கருதப்படுகிறார். ஆயுர்வேதத்தின் தந்தையாக தன்வந்திரி முனிவர். உலக மருத்துவத்தின் தந்தையாக இப்போஇரக்டிஸ் கருதப்படுகிறார். தமிழ் மருத்துவத்தின் தந்தையாக மருந்து என ஒரு தனி அதிகாரத்தை வைத்திருப்பதே அவருடைய மருத்துவ அறிவினைச் சுட்டுவதாக உள்ளது. திருவள்ளுவர் கூறும் மருத்துவ முறைகள் நவீன அறிவியல் மருத்துவத்திற்கு முன்னோடியாக விளங்குகிறது. அவர் கூறுகிற முறையினை இன்று மிகப் பெரிய மருத்துவமனைகள்கூட பயன்படுத்தாமல் அப்பாவி ஏழை மக்கள் உயிரிழக்கின்றனர். அண்மையில் 32 வயது பெண் இரண்டு குழந்தைகளுக்கு தாயாக உள்ளவர் திடீரென மரணமடைகிறார். என்ன காரணம் என்று கேட்டால் கல்சியம் குறைவாக இருந்ததால் மருத்துவமனை கொடுத்த மருந்தினை இரண்டு நாட்கள் உட்கொண்டிருக்கிறார். இந்த மரணத்திற்கு காரணமாக செவிலியர் தவறான மருந்தினைக் கொடுத்ததால் இறந்ததாகக் கூறப்படுகிறது. திருக்குறள் முறைப்படி மருத்துவமுறை அமைந்திருந்தால் இந்த மரணத்தை தவிர்த்திருக்கலாம். மருத்துவர், நோயாளர், நோய் மருந்து செலுத்தும் செவிலியர், மருந்துகளை முறையாக வழங்கும் மருந்தகங்கள், பிணி அளவு, மருந்தளவு, காலம் இவற்றையெல்லாம் கற்ற மருத்துவமுறையோடு மருத்துவம் செய்ய வேண்டும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

ஆங்கில நூல்களைக் கற்ற மருத்துவ மேதைகள் திருவள்ளுவர் கூறும் மருத்துவ முறைகளை ஆழமாக கற்றிருந்தால் மனித குலத்தினை நலத்தின் அடிப்படையில் காப்பாற்றலாம். மருத்துவமனைகளின் கட்டமைப்புகள் பெருகிய அளவிற்கு மனிதநேயம் பெருகவில்லை.

திருவள்ளுவர் கூறுவது போல கல்வியும் மருத்துவமும் சேவை மனப்பான்மையுடன் அமைய வேண்டும். அறம், பொருள், இன்பம் என திருவள்ளுவர் கூறும் ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையே எதிர்கால வாழ்க்கை முறைக்கு வழிகாட்டக்கூடிய சிந்தனைகளாக அமையும். □




# ஏகாதிபத்தியம், சுயநிர்ணய உரிமை, மக்கள் இலக்கியம் நூல் தொடர்பான கருத்துகள்

*பி. முத்துலிங்கம்*
ஓய்வுநிலை பிரதிக கல்விப் பணிப்பாளர்

**19.07.2025,20.07.2025 தினங்களில் மறுமலர்ச்சி மன்றத்தில் நடந்த கலாநிதி ந. இரவீந்திரனின் 18 நூல்கள் 15 ஆய்வாளர்கள் கலந்துகொண்ட ஆய்வரங்கில் சமரப்பிக்கப்பட்ட கட்டுரை**

தோழமையுள்ள கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களின் இந்நூல் தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அவர் மார்க்ஸியம் என்பது தேங்கிப்போன குட்டையல்ல. அது காலத்திற்கு ஏற்ப வளர்த்தெடுக்கக்கூடிய ஒன்று என்கின்றார். ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் ஏகாதிபத்தியங்களாக மாறி உலகை மறுபங்கீடு செய்யும் முதலாம் உலக யுத்தத்தை 1914இல் ஆரம்பிக்கும் வரை அந்நாடுகளில் பாட்டாளிவர்க்கப் புரட்சி ஏற்பட்டு சோசலிசசமுதாயம் உருவாகவில்லை. மாறாக 1914–1918 யுத்த காலத்தில் முதலாளித்துவம் உச்சமாக வளராத ரஷ்யாவில் 1917இல் லெனின் பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஏற்படுத்தி சோசலிச சமுதாயத்தை நிர்மாணிக்கப் பாடுபட்டார். இதற்கான காரண காரியங்களை நூலாசிரியர் சிறப்பாக விளங்கப்படுத்துகின்றார்.




ரஷ்யப் புரட்சியின் பின்னரும் பிரித்தானியா, ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்படவில்லை. மாறாக அந்த ஏகாதிபத்தியங்களால் ஒடுக்கப்பட்ட தேசங்களில் தேசிய விடு தலைப் போராட்டங்கள் முனைப்படைந்தன. மக்கள் சீனத்தில் மா.ஓ. சேதுங் தலைமையில் தேசிய விடுதலைப் போராட்டம் முழுச் சமூக சக்தியின் இயங்காற்றல் மூலம் நடைபெற்றதைக் குறிப்பிடுகின்றார். மற்றும் அதன் படிமுறைகளான மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், கலாசாரப் புரட்சி போன்றவற்றில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் பொருந்தாமைகளையும், இன்றைய சந்தைச் சோசலிச முறையினையும் ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார். அத்தோடு மா சே துங், அவர் மார்க்சிசம் தொடர்பாக 10% ஐ நூல்களில் இருந்தும், 90% ஐ பிரயோகம் மற்றும் நடைமுறை அனுபவத்திலிருந்தும் கற்றுக் கொண்டதாகக் கூறுகின்றார். இதனை ஆசிரியர் பொருத்தமாக எடுத்துக் கையாளுகின்றார்.

அவ்வாறே கியூபப் புரட்சி 1959இல் வெற்றி பெற்றமைக்கு அதன் தலைவர்களான பிடல் கஸ்ட்ரோ, சேகுவேரா போன்றோர் நாட்டிற்கு ஏற்பவே புரட்சியை நடைமுறைப்படுத்தினார்கள். சோவியத் சார்பு, சீனச் சார்பு என்றில்லாமல் தங்கள் நாட்டிற்கு தேவையானதைக் கற்றுச் செயற்படுத்தினார்கள் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

தமிழகம் நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பில் உச்சத்தை தொட்டபோதும் அடுத்த கட்ட முதலாளித்துவ வளர்ச்சி ஏன் ஏற்படவில்லை என்பதற்கான காரணங்களை சமயம், சாதியம், அறிவு, கலை, இலக்கியம், வணிகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் ஆராய்கின்றார். இவ்வாறே ஐரோப்பாவில் முதலாளித்துவம் உச்சக் கட்ட வளர்ச்சியை அடைந்த

போதும் எதிர்பார்த்தது போல அங்கு ஏன் சோசலிச சமுதாய மாற்றம் நிகழவில்லை என்பதனை ஆராய்கின்றார். இதனை உலகளாவிய ஏகாதிபத்திய வளர்ச்சி, ஒடுக்கப்பட்ட தேசங்களில் தேசிய விடுதலைப் போராட்டங்கள், வர்க்க ரீதியான மாற்றங்கள் எனும் அடிப்படைகளில் விளக்குகின்றார். பொதுவுடைமை வாதம் என்பது மேற்கத்தைய நாகரிகத்தின் உற்பத்தியென தத்துவஞானி பேட்டன் ரஸல் (Bartrand Russel) குறிப்பிடுவதும் நினைவு கூரத்தக்கதாகும்.

அப்போதைய ஜாரிச ரஷ்யா பல தேசங்களை, இனங்களை தனது ஆக்கிரமிப்பின் கீழ் வைத்தி ருந்தது. 1917 ஒக்ரோபர் புரட்சியின் பின்னர் வி.ஐ. லெனின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவற்றையெல்லாம் இணைத்தே சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை (U.S.S.R) உருவாக்கினார் என்பதை நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் 1956இல் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பவைகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இலங்கைத் தேசியம் வாய்ப்பை இழக்க, தேசிய முதலாளித்துவத்தின் இனத்தேசியத்தின் எழுச்சி பண்டாரநாயக்கவின் தலைமையில் ஏற்பட்டது. அதன் வெற்றிகள், தோல்விகள், பாதிப்புக்கள் தொடர்பாக நூலாசிரியர் அலசி ஆராய்வதை அவதானிக்கலாம். வடக்கின் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக சிறுபான்மைத் தமிழர் மகா சபை உருவாக்கப்பட்டது. பின்னர் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் மூலம் பல மாற்றங்களுக்கு வித்திட்டமை வரலாற்றுப் பதிவாகவுள்ளது.

நூலாசிரியர் தேசியம் என்பது வரலாற்று இயக்கப் போக்கின் குறித்த ஒரு பொருளுற்பத்தி உறவுக்கான வடிவம் என்கின்றார். தேசியம் என்பது புனிதமான ஒன்றல்ல. அது மாறிக்கொண்டேயிருக்கும். இவ் வடிவத்தில் தேசங்கள். தேசிய இனங்கள் ஒடுக்கப்படும்போது அவை சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையில் பிரிந்து செல்லப் போராடுகின்றன. இவ்வாறான விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இயற்பண்பு வாதம் எவ்வாறு யதார்த்த வாதமாகியது. யதார்த்த வாதம் எவ்வாறு மக்கள் இலக்கிமாகியது. அதில் பேராசிரியர் க. கைலாசபதியின் பங்களிப்பை ஆராய்ந்துள்ளார். மார்க்சியம் தேங்கிப் போன குட்டையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் 21ம் நூற்றாண்டிற்கான சோசலிசத்தை உருவாக்கும் வரையில், தென் அமெரிக்க நாடுகள் முன்னுதாரணமாக செயற்படுகின்றன. குறிப்பாக வெனிசூவேலா பாராளு மன்ற ஜனநாயகத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி கியூபாவின உதவியோடு சோசலிசக் கட்டமைப்புக்களை உருவாக்குவதாக நூலாசிரியர் குறிப்பிடுவது நம்பிகையைத் தருகின்றது. □

---

கவிதை

# எழுந்துவிடாதே



ஆயிரத்தில் ஒருவன்

*முத்தோரின்*
*இடது போத்தோரின்*
*தமிழால் தோத்தோரின்*
*புலம்பெயர்*
*வாழ்வுரிமை சேத்தோரின்*
*நீட்டோலையெல்லாம்*
*காற்றோடு*
*கணிப்பொறியின் ஊற்றோடு*
*ஊடகச் சேற்றோடு*
*ஒட்டி உறவாடி*
*ஒன்றாக சங்கமித்து*
*காதோரம் சொல்கிறது.*

*நீ*
*எழுந்துவிடாதே*
*அப்படியே இரு*

*நாங்கள் பேச வேண்டும்.*

*6.10.2025*

நூல் அறிமுகம

# சுதாராஜ் அவர்களின் 'கப்பல் கடல் வீடு தேசம்' நாவல் பற்றிய அறிமுகக் குறிப்பு

*தனுஜன்*




பத்துச் சிறுகதைத் தொகுப்புகள், ஐந்து சிறுவர் நூல்கள், ஆறு சிங்கள மொழிபெயர்ப்பு நூல்கள், ஒரு நாவல் எனப் பல இலக்கியப் படைப்புகளை வெளிக்கொணர்ந்த புகழ்பூத்த ஈழத் தமிழ் இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவரான பொறியியலாளர் எஸ். சுதாராஜ் அவர்களின் 'கப்பல் கடல் வீடு தேசம்' நாவல் அண்மையில் வெளிவந்தது. இது இரண்டு வருடங்கள் வரையில் தொடர்ச்சியாகக் கடலில் பயணித்தவாறே, பெரியதொரு கப்பலில் பணியாற்றும் பொறியியலாளர் ஒருவரின் நேரடி அனுபவப் பகிர்வாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூன்று சூறாவளிகளுக்குள் மாட்டுப்பட்டு மீளும் ஒரு வீரதீரக் கதைபோலவும் எனக்கு இதை எண்ணத்தோன்றுகின்றது. அதில் ஒன்றுதான் கருங்கடலில் கப்பல் தரித்து நின்றபோது ஏற்பட்ட இயற்கையின் சீற்றமான காற்றுச் சூறாவளி. மற்றைய இரண்டும் செயற்கையான யுத்தச் சூறாவளிகள். அதில் ஒன்று வட மற்றும் தென் யெமன் நாடுகளுக்கிடையிலான போர். மற்றயது இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம்.

கதையானது உலகின் மிகவும் பழமையான 'ஏடன்' துறைமுகத்தில் ஆரம்பமாகிறது. இத் துறைமுகத்தில் இருந்துதான் கி.பி 50 ஆம் ஆண்டளவில் ரோமானிய கடலோடியான கிப்பாலஸ் (சு.வெங்கடேசனின் வேள்பாரி நாவலில் இப் பாத்திரம் முக்கிய இடம் பெறுகின்றது.) பருவக்காற்றின் துணையுடன் இந்தியாவிற்குக் கடல் வழியாகப் பயணிப்பதற்கான பாதையைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டபோது, ஒரு சூறாவளியில் மாட்டுப்பட்டு இலங்கையின் குதிரை மலையில் கரையொதுங்கியதாகப் பிளினியின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

மிகப்பெரிய சீமெந்து பொதியிடும் தொழிற்சாலையுடன் கூடிய கப்பல் தென் யெமன் இராணுவத்தினால் ஏடன் துறைமுகத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படாது, அங்கிருந்த ஈராக்கியக் கப்பல்கள் மீது வட யெமன் படைகள் தாக்காத வகையில் பாதுகாப்பதற்காகப் பணயம் வைக்கப்படுகின்றது.

இந் நிலைமைகளைச் சொல்ல வரும்போது, "துறைமுகத்திலுள்ள ஸ்டோர் கட்டடங்களின் கூரை முகடுகளுக்குள் புறாக்கள் சீவித்தன. அந்தப் பக்கம் நடந்து போனால் குஞ்சுகள் கீ.. கீ.. எனக் கத்துவதைக் கேட்கலாம். மாலையானால் புறாக்கள் எல்லாம் தங்கள் கூடுகளுக்குள் ஒதுங்கிவிடும். பொழுது விடிந்ததும் கூரை உச்சியில் வரிசையாக அமர்ந்து ஒன்றுடன் ஒன்று பேசுவதையும் ஒன்றையொன்று உரசி காதல் செய்வதையும் இங்கிருந்தே காணலாம். இப்போது அந்தப் பறவைகளெல்லாம் எங்கே போய்விட்டன? அவைகளும் இடம்பெயர்ந்து போய்விட்டனவா?

விமானங்கள் கூவிக்கொண்டு வரும் வேளைகளிலும் குண்டு வீச்சுச் சத்தங்களின்போதும் அவை கலவரமடைந்து சிறகடித்துப் பறப்பதை அவதானித்திருக்கிறேன். இது சரிப்பட்டு வராது... 'போதுமடா சாமி' என அம்மனைப்போல அந்தப் பறவைகளும் போய்ச் சேர்ந்திருக்குமோ? தங்களது குஞ்சுகளையும் முட்டைகளையும் விட்டு அவை அவ்வாறு தப்பிப் போயிருக்குமா? ஐயையோ... இந்த யுத்தச் சூழலில் குஞ்சுகளைத் தனியே விட்டுப் போக அவற்றிற்கு எப்படி மனம் வந்தது?" என வரும் காட்சி விபரிப்பும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உள்ளத்தில் ஓர் அதிர்வை உருவாக்கிவிடுகின்றது.

அந்தத் தத்தினை ஒருவாறு தாண்டிச் செல்ல. கருங்கடலில் பெரும் புயல் தாக்குகின்றது. இரண்டாகப்



பிளவடைந்து மூழ்க இருந்த கப்பல் இவர்களின் விரைந்த செயற்பாட்டால் பாதுகாக்கப்படுகின்றது.

இவற்றினூடு 1990–95 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தனது குடும்பத்தை, அதுவும் இரண்டு சின்னஞ்சிறிய பெண் பிள்ளைகளை விட்டுவிட்டுக் கப்பலுக்குப் பணிபுரியச் சென்ற தந்தையின் ஏக்கங்களும் தவிப்புகளும் கதை முழுதும் விரவிக் கிடக்கின்றன.

இரு தரப்பிலும் உள்ள அரசியல்வாதிகளின் தவறுகளால் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவற்றுத் தொடர்வதைத் தன் தரப்பு நியாயங்களுடன் எழுத்தாளர் வெளிப்படுத்துகின்றார். இராணுவம், புலனாய்வுப் பிரிவுகளின் கெடுபிடிகளை யதார்த்தபூர்வமாகப் பதிவுசெய்யும் அதேநேரம், சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலான நல்லுறவின் தன்மைகளைப் பல்வேறு இடங்களிலும் இந் நாவல் கோடிட்டுக் காட்டுவது நம்பிக்கையைத் தருகின்றது.

1995 யாழ்ப்பாண வலிகாமப் பேரிடர்ப் பெயர்வின்போது, ஆதரவற்ற தனது இளம் மனைவியும் மூன்று குழந்தைகளும் உயிருடன் உள்ளார்களா? என்பதை அறியாத அந்தரத்தில் அனைவரையும் தவிப்பில் ஆழ்த்திக் கதையை எழுத்தாளர் முடித்திருப்பது, ஏக்கத்தை அதிகரித்து எதிர்பார்ப்பைத் தூண்டுகின்றது. ஆங்காங்கே தெரிகின்ற சில எழுத்துப் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம்.

கைத் தொலைபேசிகளோ, வட்ஸப்புகளோ இல்லாத ஒரு காலத்து வாழ்வையும், சவால்கள் நிறைந்த கடல் பயண அனுபவங்களையும் அறிந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு இப் புத்தகம் அருமையானதொரு பொக்கிசம். இலங்கைத் தமிழ் எழுத்துப் பரப்பிலிருந்து முகிழ்த்திருக்கும் ஓர் உலகத் தரம் மிக்க இலக்கியம் இது என்றால் தவறில்லை.கைத் தொலைபேசிகளோ, வட்ஸப்புகளோ இல்லாத ஒரு காலத்து வாழ்வையும், சவால்கள் நிறைந்த கடல் பயண அனுபவங்களையும் அறிந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு இப் புத்தகம் அருமையானதொரு பொக்கிசம். இலங்கைத் தமிழ் எழுத்துப் பரப்பிலிருந்து முகிழ்த்திருக்கும் ஓர் உலகத் தரம் மிக்க இலக்கியம் இது என்றால் தவறில்லை. □

---

**கவிதை**

# கல்லுண்டாய் வெளியினிலே

**இயலான்**

*காக்கை தீவுக் கரையினிலே*
*களவாய் மீனைக் கொத்தவோ*
*காத்திருக்கும் கொக்காரே*
*வெள்ள நிறக் கொக்காரே*
*கொள்ளையாசை உன்மேலே*
*கொஞ்சமென்னைப் பாருங்கோ*

*கடல்தாண்டி மலைதாண்டி*
*பனைவெளி தாண்டி*
*கண்டபடி ஊரறியா*
*உலகஞ்சுற்றி நாரையாரும்*
*உனக்குப் போட்டியாயோ*
*படைபடையாய்ப் பறந்துவந்து*
*பனங்கிழங்கு வாயுடனே*
*செங்காய் நிறக் காலூன்றிக்*
*கல்லுண்டாயில் கால் பதித்தார்.*

*புலம்பெயர் உறவுகளின்*
*படையெடுப்பு நடக்குதோ*
*ஊருலகு சுற்றி வருவாரோ*
*ஆருமனக்கு உதவுவரென்றோ*
*ஒற்றைக்காலில் நிற்கின்றீர்*
*கல்லுண்டாய் வெளியினிலே*
*காத்துக் கிடக்கின்றீர்*



# குறுங்கவிகள் நான்கு

அழ. பகீரதன்

## விளக்கம் புரிந்திடில்!



எனக்குள் நீயும்
உனக்குள் நானும்
என்னில் நீயும்
உன்னில் நானும்
என்னால் நீயும்
உன்னால் நானும்
என்னொடு நீயும்
உன்னொடு நானும்
கலப்பது நிசமெனில்
விலக்கென ஏனெமக்குள்
சாதியம் இனத்துவம் மதம்...
இல்லாப் பிரிவினைகள்
எதற்கெமக்குள்?
விதைத்தது எவரோ!
விளக்கம் புரிந்திடில்
விலக்குவோம் பிரிவினைகள்..
கலந்திடப் புரிதல்கள்!

## இன்னும் ஏன் தயக்கம்?



தெளிவு பெறுவோம்
தேறுவோம் ஒளிபெறுவோம்
ஒளிவு மறைவின்றி
இயல்பாய் பேசிடுவோம்
பண்பு பெறுவோம்
பாலிய மங்கையரை பேணிடவே!
பற்றுக் கொள்வோம்
நல்நெறி நலம் காப்பதிலே!
மோகம் காமம் ஒப்பிய
திரை மறை நிலை ஒழிய
பள்ளி மாணவர்
பண்பு நிலை காத்திடவே
பகுத்து அறிந்திடில்
உறவுணர்வு நெறிப்பாடம்
வகுத்துக் கொடுப்பதே
வாய்ப்பாகும் என்பேன்
இன்னும் ஏன் தயக்கம்?

## யாபேரும் யாவர்க்கும்...



வலிமை பெறு அரசமைத்து
தாமுயர்ந்து ஓரிருவர் சந்ததியே
நிலமளந்து ஆண்டனுபவித்து
மாந்தரை மிடிமை நிலைக்காளாக்கி
ஆழ்கின்ற .உலகோ நீளும்?
தொழிலாளர் நலன் வேண்டி
தொய்வில்லா நெறியொன்றில்
தொழிலாளர் தலைமையுற
எழிற்சியுறு எம்மக்கள் எழுந்து
நிலைமாற்றும் கொள்கையில்
வளமெல்லாம்
பொதுமை ஆக்கிடவே
யாபேரும் யாவர்க்கும் துணையாக
ஒருவர் எல்லோருக்குமாய்
எல்லோரும் ஒருவருக்காய்
நல்நெறியில் கூடுவரேல்
செல்வமது சேருமே
மிடிமையில் வீழ்ந்தார்க்கும்!

## இயலும், எண்ணுவமோ?



பெண்ணின விடுதலையைப்
பெற்றுத் தரவென்றோ
கண்ணகி கோயில் முன்
தவமிருக்கின்றனர்
பெண்ணின விடுதலை பெற்றிட
அறியாமை, தெளியாமை
கொண்டதனாலன்றோ
முடியா நிலைமை ஆயிற்று
கண்கண்ட தெய்வம்
நம்முள் உள அறிவே
என உணரில்
விண்முட்ட எழுந்திட
விடுதலையும் சித்திக்கும்
பெண்ணெனத் தலை நிமிர்ந்திட
காமுகரும் திகைப்பர்!
எண்ணில் ஏற்றம்
பெறுதல் இயலும்,
எண்ணுவமோ?



# பேராசிரியர் கைலாசபதி பார்வையில் வெகுசன இலக்கியம்

தென்புலத்தார் தொழுதேற்றல்

நூல் நயம்

*ச. சஜீலன்*

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் எழுதிய ஈழத்து இலக்கிய முன்னோடிகள் என்ற நூலிலிருந்து வெகுஜன இலக்கியம் பற்றிய அவரது பார்வையைத் தரலாம் எனக் கருதுகிறேன். புதிய நோக்குகளும் போக்குகளும் என்ற கட்டுரையிலேயே அவர் வெகுசன இக்கியம் பற்றிய கருத்துக்களை முன்வைக்கின்றார்.

வெகுசன இலக்கியமென்பது சாதாரண மக்கள் அல்லது பெரும்பான்மைப் பொதுமக்கள் இலகுவில் படித்தறிந்து புரிந்து கொள்ளக்கூடிய வகையில் படைக்கப்படும் இலக்கியமாகும் என்பது பேராசிரியர் கைலாசபதி அவர்களின் கூற்றாகும். ஆரம்ப காலங்களில் அதாவது மன்னர் ஆட்சிக் காலத்தில் பிரபுக்கள், ஜமீன்தார்கள், சிற்றரசர்கள், மடாதிபதிகள், ஆதீனர்கள் மட்டத்தில் மட்டுமே இலக்கியங்கள் வழங்கி வந்தன. அதாவது உயர் வர்க்கத்தினர் மட்டுமே இலக்கியங்களைப் படைத்ததுடன் படித்துச் சுவைத்தும் வந்தனர்.

சாதாரண பாமர மக்களுக்கும் இலக்கியம் சென்றடையத் தொடங்கிய காலமாக 19ம் நூற்றாண்டின் இறுதிக் கால்நூற்றாண்டு அடையாளப்படுத்தப்படுகிறது. எனினும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட பல மாற்றங்கள் இதற்கான ஆரம்ப வித்தாக அமைந்தன. அந்தவகையில் முதலாவதாக மிசனரிமார்களால் பாகுபாடின்றி பெண்கள், விளிம்புநிலை மக்களுக்கு வழங்கப்பட்ட கல்வியும், அச்சியந்திரங்களை நிறுவுவதற்கு சுதேசிகள் பெற்ற வாய்ப்பும், உரிமையும் ஈழத்து இலக்கியத் துறையில் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தியதாகக் கூறும் கைலாசபதி அவர்கள் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் குறிப்பிடத்தவறவில்லை. எல்லா மக்களுக்கும் சமமாக வழங்கப்பட்ட கல்வி வாசிப்புப் பழக்கத்தை மக்களுக்குள் ஏற்படுத்துகிறது. இதனால் கல்வியறிவு பெற்ற மக்கள் கூட்டம் ஈழத்தில் உருவாகத் தொடங்குகிறது.

அச்சு இயந்திரத்தின் வருகையுடன் பத்திரிகைகள், நூல்கள் என்பன ஆயிரக்கணக்கில் உருவாகி மக்களிடம் சென்றடைந்தன. இது இலக்கியத் துறையுடன் கலை, விஞ்ஞானம், மருத்துவம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழம், தமிழகம் ஆகிய இருபுறத்திலும் இலக்கியம் வளர்ச்சியடைந்ததாயினும் ஈழத்திலேயே இது மிகமுனைப்படைந்தது. இதற்கு வித்திட்ட மிக முக்கிய ஆக்க இலக்கிய கர்த்தாக்களாக பேராசிரியர் கைலாசபதியவர்கள் இருவரை அடையாளப் படுத்துகிறார். அதிலொருவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர். மற்றையவர் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள். நாவலர் விளங்கிக் கொள்வதற்கு காரணமான பழங்காலத்து செய்யுள் இலக்கியங்களை வசனம் மூலமாக மாற்றி வெளியீடு செய்ததுடன எல்லோரும் இலகுவில் படித்தறியும் நிலையை ஏற்படுத்தினார். தாமோதரம்பிள்ளை பதிப்புத்துறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார். சங்ககால இலக்கியங்களை அச்சிற் பதிப்பித்து நடமாடும் இலக்கியங்களாக அவற்றை உலவவிட்டார்.

இங்கு ஆறுமுகநாவலரவர்கள் இரு முக்கிய விடயங்களில் முனைப்பாகச் செயற்பட்டவராக கைலாசபதியவர்வகள் அடையாளங் காண்கிறார். அதாவது சனங்களின் நிலையறிந்து அதற்காக பாடுபடாது அசிரத்தையாக இருந்த அரசாங்க அதிகாரி களையும், மடாதிபதிகளையும், பிரதானிகளையும் கண்டித்ததுடன் அவர்களது மக்கள் விரோதப் போக்கினையும் இடித்துரைத்துள்ளார். 1867ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் பஞ்சமும், கொலறா நோயும் ஏற்பட்டபோது ஆறுமுகநாவலர் அவர்கள் இலக்கியம் படைப்பதை நிறுத்திவிட்டு சனங்களின் துயர்துடைக்க அவர்களின் பசியைப் போக்க கஞ்சி உணவு வழங்கிய செயற்பாட்டினை முற்போக்கான மக்கள் செயற்பாட்டின் ஓர் அங்கமாகக் காண்கிறார் கைலாபதியவர்கள்.

அதுமட்டுமல்லாது 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி மற்றும் பின்கால் நூற்றாண்டுகளில் முற்போக்கு செய்யுள் இலக்கியங்களைப் படைத்தளித்த புலவர்களாகச் சிலரைக் குறிப்பிடுகிறார். அதாவது இவர்கள் கடவுளர்க்காக பிரபந்தங்களையும், செய்யுள்களையும் இயற்றினராயினும் மக்கள் நிலையறிந்து அவர்களுக்காக இலக்கியம் படைத்தவர்களாயுமுள்ளனர். அவர்களுள் சமகால நிகழ்ச்சிகளை சமுதாய நோக்கில் பாடிய புலவர்களாக குமாரசாமி முதலியார், சுப்பையனார். அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர், கோப்பாய் வே. இராமலிங்கம், தி.த.சரவணமுத்துப்பிள்ளை, சுன்னாகம் முத்துக்குமாரக்கவிராசர் ஆகியோர் முதன்மையானவர்கள். குமாரசாமி முதலியார் 1866–67ம்

ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட கடும்பஞ்சம், கொலராநோய்பற்றி "எம் தெய்வம்" எனும் கீர்த்தனைச் செய்யுள் இயற்றியுள்ளார். இதில் அவர் சமுதாயத்தில் காணப்பட்ட திருட்டுத்தனம், போலித்தனம், பேராசைத் தனம், நீசத்தனம் முதலியவற்றைச் சாடியுள்ளார்.

கனகி புராணம் இயற்றிய சுப்பையனார் அக்காலத்தில் வாழ்ந்த பிரபுக்களின் சீரழிந்த ஒழுக்க நெறியினைச் சாடுவதுடன் பொதுவான தார்மீக வீழ்ச்சியையும் சித்திரிக்கின்றார். அச்சுவேலி நீ. காசிநாதப்புலவர் யாழ்ப்பாண சமூகத்தின் வாழ்க்கையுடனும் உணவுப் பழக்கவழக்கத்துடனும் ஒன்றிய பனை, பனம்பொருள் உற்பத்தி பற்றி தாலபுராணம் எனும் செய்யுளை இயற்றியுள்ளார். இது மக்களுக்குப் பயன்மிக்கதாக அமைந்துள்ளது. கோப்பாய். வே. இராமலிங்கம் கோட்டுப்புராணம் இயற்றினார். கோட்டுப் புராணமென்பது நீதிமன்ற புராணமாகும். அக்காலத்தில் நீதிமன்றப் படிக ளிலேறி மக்கள் படும் துயரத்தைக் கண்ட புலவர் நீதிபதி, வழக்காடுவோர், சட்டத்தரணிகள், நியாயவாதிகள் ஆகியோர் செய்யும் வஞ்ச கத்தனங்களையும் சூழ்ச்சிகளையும் சாடியும் கண்டித்தும் கோட்டுப் புராணத்தை இயற்றி யுள்ளார். தி. த. சரவணமுத்துப்பிள்ளை தத்தை விடுதூது இயற்றியுள்ளார். பெற்றோரால் சிறைப் படுத்தப்பட்டிருக்கும் காதலர்களின் நிலையை இது எடுத்துக்காட்டுகிறது. அக்கால சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட அவலநிலையை தத்தை விடுதூது இலக்கியம் சித்திரிக்கிறது. அதேபோன்று முத்துராசக்கவிராசர் இயற்றியுள்ள ஒரு செய்யுள் கிறிஸ்தவ மதத்தில் வேதன நிமித்தம் பிரவேசித்த சிலரை உடுவிலிலிருந்த பாதிரியார் ஒருவர் விலக்கியபோது அவ்வாறு விலக்கப்பட்ட ஒருவரது கூற்றாக மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை எடுத்துக் காட்டும் செய்யுளாக அமைகிறது.

இவ்வாறாக சில இலக்கிய கர்த்தாக்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் இவர்களின் பின்வந்த புலவர்களுக்கு ஒரு முன்னுதாரணமான படைப்புக் களாக அமைந்தன. 20ம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டில் பாவலர் துரையப்பாபிள்ளை பரிசோதனை முற்போக்கு இலக்கியங்களைப் படைப்பதற்கு 19ம் நூற்றாண்டின் இவ்விலக்கிய முன்னோடிகள் முன்னுதாரணமாக அமைந்துள்ளார்கள்.

நிறைவாக கவிதையாக இருக்கட்டும், நாடகமாக இருக்கட்டும் நாவல்கள், கதைகள் எதுவாக இருந்தாலும் அவை சாதாரண மக்களுக்கான இலக்கியமாக, வெகுசன இலக்கியமாக சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சமுதாய நோக்கோடு, சமூகப் பிரக்ஞை உணர்வுடன ஒரு இலக்கிய கர்த்தா இலக்கியங்களைப் படைக்கவேண்டுமென்பது கைலாசபதி அவர்களின் கூற்றாகும். சமகாலத்தில் சமுதாயத்தின் இயக்கவியலையும், மாற்றங்களையும் பதிவு செய்யும் இலக்கியங்களும், இலக்கிய கர்த்தாக்களுமே காலத்தை வென்று நிற்பார்கள் என்பது உறுதி என்கிறார் பேராசிரியரவர்கள்.

□

---

பாடல்

# எங்கள் முற்றம்

செண்பகன்

*இல்லம் செல்வோம்*
*வில்லங்கம் விலகி*
*வெல்லும் வழி*
*சொல்வோம்.*

*எங்கள் முற்றம்*
*எல்லாம் சுற்றம்*
*வல்லமை பெற்று*
*நல்லோ ராவோம்.*

*பற்பல வேறுபாடு*
*உற்ற பல மாறுபாடு*
*கற்று உறவாடி*
*பற்றோடு பயில்வோம்.*

*உற்றோரும் மற்றோரும்*
*கற்றோரும் பற்றோடும்*
*பற்பல பலன் பெற்று*
*பாரெங்கும் முழங்குவோம்*



# தேவதை

*சாதனா*



ஓரூரில் மேரி எனும் சிறுமி வாழ்ந்து வந்தாள். அவளிற்கு ஊரினைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென மிகவும் ஆசை. ஆனால் அவளது ஆசையை நிறைவேற்றுவதற்கு அவளிற்கு தாயோ தந்தையோ இருக்கவில்லை. அவளது தாயும் தந்தையும் ஒரு விபத்தில் இறந்துவிட்டனர். அவள் அவளுடைய பாட்டியோடுதான் இருந்தாள். அவளது பாட்டிக்கு அவளை வெளியே கூட்டிச்செல்வதற்கான பணம் இருக்கவில்லை.

மேரி ஒருநாள் தன்னால் மட்டும் ஏன் ஒரு இடமும் செல்லமுடியவில்லை என்று அழத் தொடங்கினாள். அவளது கண்ணிலிருந்து கண்ணீர் மழைபோல் கொட்டியது. அவள் அழுதுகொண்டே அவளது அறைக்குள் சென்று படுத்தாள்.

திடீரென ஒரு வெளிச்சம் அங்கு தோன்றியது. அவள் கண்விழித்துப் பார்க்கிறாள். அங்கே ஒரு அழகான தேவதையைக் கண்டாள். அவள் மிகவும் ஆச்சரியப்பட்டு "நீ யார்?" எனக் கேட்டாள். அப்பொழுது அந்தத் தேவதை கூறியது. "என்னைப் பார்த்துப் பயப்படாதே. நான் உன் ஆசையை நிறைவேற்ற வந்தவள். உன் ஆசை என்ன?" என்றது. மேரி தனக்கு நீண்ட பயணம் செய்வதே ஆசை என்று கூறினாள்.

அப்பொழுது அந்தத் தேவதை, "நீ மிகவும் நீண்ட பயணம் மட்டுமல்லாது மிகவும் சுவாரசியமான பயணம் செல்லப்போகிறாய். அதனை நீ கற்பனை செய்வதே கடினம்" என்று கூறி மறைந்தது.

மேரிக்கு தேவதை கூறியதொன்றும் புரியவில்லை. என்ன ஆச்சரியம்! அதே தேவதைபோல் மேரி கூடுவிட்டு கூடு பாய்ந்து உருமாறினாள். மேரி கட்டிலை விட்டு இறங்கி வெளியே வந்து பார்த்தாள். அவள் கற்பனை செய்யத்தொடங்கினாள். அவள் முதலாவதாக

பறக்க ஆசைப்பட்டாள். அவளுடைய கால்கள் மெதுமெதுவாகப் பூமியினை விட்டு உயர்ந்ததை உணர்ந்தாள். மேரி ஒரு பறவையைப்போல் பறக்க ஆரம்பித்தாள். அவள் வானத்தை நோக்கிப் பறந்தாள். அவள் முகில்களில் படுத்து உருளுகிறாள். புரளுகிறாள். அப் பஞ்சு முகில்களில் துள்ளித் துள்ளி குதிக்கிறாள். அவள் குதித்துக்கொள்ளும் பொழுது முகில்கள் மறைந்தன. அவள் அங்கிருந்து விழுந்து ஒரு வானவில்லில் சறுக்கி விளையாடினாள்.

அவள் சறுக்கும் பொழுது விதம் விதமான வண்ணத்துப்பூச்சிகளும் பறவைகளும் அங்கு அவளோடு சேர்ந்து சறுக்கின.

அந்த வானவில்லின் முடிவு ஒரு நகரமாக முகிழ்த்தது. அவள் அந் நகரத்தினை சுற்றிச்சுற்றிப் பார்க்கிறாள். அங்கிருந்து அருமையான ஒரு வாசனை அவளது மூக்கினைக் கவர்ந்தது. அது என்னவென்றால் அந்நகரம் முழுவதும் இனிப்புப் பண்டங்களினாலானது. வீடுகள் இனிப்புப் பலகாரங்களினாலும் கடல் வெண்ணெய்யாலும் மரங்கள் ஐஸ்கிறீமினாலும் ஆனது. அவள் எல்லாவற்றையும் சுவைத்து, அவளுடைய வயிற்றை நிரம்பிக்கொண்டு அந்நகரத்தினை விட்டுப் புறப்பட்டாள்.

அவளுடைய செட்டைகள் மறைந்தன. அங்கு ஒரு பறக்கும் பாய் இருந்தது. அதில் ஏறி அவள் நிலவுக்குச் சென்றாள். செல்லும்



வழியில் நட்சத்திரங்கள் அவளைப் பார்த்து மின்னி மின்னிச் சிரித்தன. அவள் இப்போது நிலவினை வந்தடைந்தாள். அங்கு தாவித் தாவிக் குதித்து கண்ணை மூடிக்கொண்டு அங்கிருந்து பாய்கிறாள்.

அவள் அவளுடைய கண்ணைத் திறந்து பார்க்கிறாள். அதே கட்டில் அதே பாட்டி அதே வீடு. ஒன்றுமே மாறவிலை. ஆனால் அவளுடைய முகத்திலும் மனத்திலும் இருந்த கவலை, கஷ்டம் மாறிவிட்டன.

□

---




## புது வரவு

*பாட்டி சொன்ன புராண இதிகாசக் கதைகள்*

- ஆசிரியர் : வள்ளியம்மை சுப்பிரமணியம்
- வெளியீடு : கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகம், தொல்புரம் மேற்கு. சுழிபுரம்
- அச்சு : ஜே.எஸ்.பிறின்ரேஸ், பண்டத்தரிப்பு
- பக்கம் : 160
- விலை : ரூபா 1300/–

இளையோர் இலக்கியம்

# சாக்கடையில் புழுவாய் பிறந்த அரசன்

காலைச் செஞ்சூரியன்



அந்தப் பௌர்ணமி இரவில், கழிவு நீர் செல்லும் சாக்கடைக் கால்வாயின் அருகில், உருவிய வாளுடன் அரசன் தனது தளபதி உள்ளிட்ட படை வீரர்கள் சிலருடன் விழிப்போடு காத்திருந்தான். அந்தக் காத்திருப்பு வேறு யாருக்காகவும் அல்ல. குறித்த தினத்தின் இரவுப் பொழுதில், ஒரு தடவை அக் கால்வாயில் இருந்து வெளிவரவுள்ள புழு ஒன்றினைக் கொல்வதற்காகவே. அவர்கள் கண்விழித்துக் காத்திருந்தனர்.

அதற்கு ஒரு காரணம் இருந்தது. தற் போதைய அரசனுடைய தந்தையான முந்திய அரசன், நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கை யில் இருந்தபோது, அவனது அரண்மனைக்கு முக்காலமும் உணரும் சக்திமிக்க முனிவர் ஒருவர் வருகை தந்தார். மிகவும் சோகத்துடன் மரணப் படுக்கையில் இருந்த முந்திய அரசன்,

"மகா முனிவரே, தங்கள் சக்தியைப் பயன்படுத்தி, என்னை இறப்பிலுருந்து காப்பாற்றுங்கள்" என வேண்டினான்.

"அது மட்டும் என்னால் இயலாது. ஆனால், உனது மறு பிறப்புகள் எவ்வாறு அமையும் என்று எனது ஞானதிருஸ்டியால் அறிந்து சொல்ல முடியும்" எனக் கூறினார்.

தான் மறுபிறவியில் எத்தகைய வாழ்வை அடைவேன், என்பதை அறிய ஆவல்கொண்ட அரசன், அதனைத் தெரிவிக்குமாறு முனிவரைக் கேட்டுக்கொண்டான்.

சொல்லத் தொடங்கிய முனிவர்,

"நீ அடுத்த பிறவியில் உனது அரண்மனைக் கழிவுகள் வெளியேறுகின்ற சாக்கடையிலே புழுவாகப் பிறப்பாய். அவ்வாறு புழுவாய்ப் பிறந்த நீ, அகால மரணம் அடைந்தால், அதற்குப் பின்னர் வரும் பிறப்பில், உன் இறப்புக்குப் பின்னர் இந்த நாட்டின் அரசனாக முடி சூடப்போகும் உனது மகனுக்கு மூத்த மகனாகப் பிறந்து, இந்த நாட்டுக்கு மீண்டும் அரசனாக முடி சூடுவாய்." என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த அரசன், முனிவரிடமே,

"புழுவாகப் பிறந்த பின்னர், எனக்கு அகால மரணத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம்? என ஆலோசனை கேட்டான்.

அதற்கு முனிவர்,

"நீ இறக்கும் நாளில் இருந்து அடுத்து வரும் ஐந்தாவது பௌர்ணமி தினத்தன்று, முன்னிரவு முடிந்து பின்னிரவு ஆரம்பிக்கும் நடுச் சாமப் பொழுதில், இக் கோட்டையின் பிரதான வாயிலுக்கு அருகில் உள்ள, சாக்கடையின் திறந்த பகுதி ஊடாக வெளியே வருவாய். அவ் வேளை யாராவது உன்னைக் கொன்றால், உனக்கு மூன்றாவது பிறப்புக் கிடைக்கும். அல்லாவிட்டால், நீ தொடர்ந்து புழுவாகவே வாழ்ந்து மடிந்து போவாய்" என்றார்.

அதைக் கேட்ட அரசன். உடனே தனது மூத்த மகனை அழைத்து, முனிவர் தெரிவித்த விடயங்களைக் கூறியதுடன், அப் புழுவைக் கொல்லும் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தான்.

அதன் பின்னர் ஓரிரண்டு நாட்களில் அரசன் இறந்துவிட, அடுத்த சில வாரங்களிலேலேயே மூத்த மகனும் அடுத்த அரசனாக முடிசூடிக் கொண்டான்.

ஐந்தாவது பௌர்ணமியும் வந்தது. முனிவர் சொன்னதுபோலவே, முன்னிரவுப் பொழுது முடி யும் தறுவாயில், அவர்கள் எதிர்பார்த்திருந்த அப் புழு மிகவும் அழுக்காகியிருந்த கால்வாயில் இருந்து வெளியே வந்தது. தருணத்திற்காகக் காத்திருந்த அரசனும் வீரர்களும் வாளை வீசியவாறு அதனை வெட்டிக் கொல்வதற்காகப் பாய்ந்தனர். அதனை அவதானித்த புழு விரைவாகவே நழுவிச் சென்று, சாக்கடைக்குள் குதித்து மறைந்தது. ☐



பயில்நிலம்

# மரங்களை நடுவோம்

**சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு கதை**

*பாத்திமா சேக்கா*

ஓர் ஊரில் ஒரு காட்டில் பல மரங்களையும், காடுகளையும் ஒரு கூட்டம் அழித்துக் கொண்டிருந்தனர். அந்த வழியால் சந்தைக்கு நானும் அப்பாவும் சென்று கொண்டிருந்தோம். அந்த வேளை நானும் எனது அப்பாவும் இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தோம்.

எனது அப்பா "என்ன இது? மரங்களையும் இவ்வளவு பெரிய காடுகளையும் அழித்துக் கொண்டு இருக்கிறார்களே! மரம் இருந்தால் தானே உயிர் வாழ முடியும். மரம் இருந்தால் நமக்கு மாரி காலத்தில் பயிர் செய்ய அதாவது, விவசாயத்துக்கு மழை கிடைக்கும். சுத்தமான மழை நீரை இழக்க; ஆனால் இந்த ஊர் மக்களுக்கு உண்மையாக குடிநீர் வசதி இல்லை. வடிகால் வாய்க்காலிலிருந்து எடுக்கும் நீரைத்தான் பிள்ளைகளில் இருந்து பெரியோர்கள் வரை பருகுகிறார்கள். காடுகளை அழிப்பதனால் மழை வராது. மழை வராவிட்டால் குளம் நிறையாது, புற்றரைகள், மரம். செடி. கொடிகள் வளராது. நீர் தேவையென்றால் மழை தேவை. மழை தேவை என்றால் மரம் தேவை. இவ்வளவு தேவைகளுக்கு மத்தியில் மரங்களை வெட்டுகிறீர்கள். காடுகளை அழிக்கின்றீர்களே! இது நியாயமா" என்று மரம் வெட்டுபவர்களிடம் நியாயம் கேட்டார்.

அதற்கு மரம் வெட்டுபவர்கள் கூறினார்கள்: "ஐயா நாம் காடுகளை அழித்துவிட்டால் இது ஒரு சமதரை நிலமாக மாறி விடும்,பின்னர் நாம் இந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை ஒன்றை அமைக்கப்போகின்றோம். இந்த மரங்களை வெட்டினால் எமது ஐயா எமக்கு பணம் நிறையத் தருவார்."

"சரி தம்பிமார்களா நீங்கள் எதிலிருந்து நீரைப் பருகுகிறீர்கள்?" என்று எனது அப்பா மரம் வெட்டுபவர்களிடம் கேட்டார்.

அதற்கு மரம் வெட்டுபவர்கள் கூறினார்கள்: "அண்ணா! நாம் மழைநீரைத்தான் பருகுகின்றோம்"

"சரி நீங்களே மழைநீரைத்தானே பருகுகிறீர்கள். மழை மரத்தால் தான் வருகிறது. எம் ஊரில் சிறிய காடுகள் இதுதான். இதையும் வெட்டி அழித்தால நாம் நீருக்கு என்ன செய்வது என்று அப்பா கூறினார்.

அந்த வேளை நான் கூறினேன்: "மரத்தைப் பற்றிநான் ஒரு பாடல் பாடுகிறேன். கேள்,

*மரஞ் செடி கொடியால் மண்ணில் வாழ்வு*
*மனிதர்கள் இதனை அறிவது அறிவு*
*அறம் செயல் நல்ல மரம்செடி வளர்ப்பு*
*அனைவரும் இதனை உணர்வது சிறப்பு*





*உடுத்தும் ஆடை தருவது எதுவோ?*
*உண்ணும் உணவுகள் தருவது எதுவோ?*
*படுக்கும் பாய்கள் தருவது எதுவோ?*
*பலவகை மரங்கள் செடிகொடி அன்றோ?*
*அரிசியும் பருப்பும் கொடுப்பது எதுவோ?*
*அறுசுவை உண்டி அளிப்பது எதுவோ?*
*தரணியில் வாழ நற்றுணை கொடுப்பது எதுவோ?*
*மதுரக் கனிகள் கொடுப்பது எதுவோ?*
*நீங்காது எம்மைக் காப்பது எதுவோ?*
*நிழல்தரு மரங்கள் செடிகொடி அன்றோ?*
*வாழ்க மரங்கள் செடிகொடி வாழ்க!*
*வானம் பொழிந்து மாநிலம் வாழ்க*
*தாழ்வு இல்லாத தருமம் வாழ்க!*

என்று பரலி சு நெல்லியப்பர் அவர்கள் மரத்தைப் பற்றிப் பாடி உள்ளார். "

"சரி என் மகனே! ஒரு பாடல் கவித்தேனை பாடியுள்ளான். அதனால், நீங்கள் மரம் வெட்டாதீர்கள்!"

அவ்வேளை மரம் வெட்டுபவர்கள் கூறினார்கள்.

"அண்ணா நாங்கள் இனிமேல் மரங்களை வெட்டவில்லை.நீங்கள் இவ்வளவு கூறியதற்குப் பிறகும் நாங்கள் மரம் வெட்டுவது உங்களுக்கு அவமரியாதை. வெட்டிய மரங்களுக்குப் பதிலாக நாம் புதிய கன்றுகளை வாங்கி வந்து நடுகிறோம். நாங்கள் செல்கிறோம். அண்ணா" என்று சொல்லிவிட்டு சென்றனர். □

---

**கவிதை**

# டெங்கு நுளம்பு

*சி. மகாலிங்கம்*

*டெங்கு நுளம்பு*
*அற்ப பூச்சி என்று என்னை*
*எண்ணிவிடாதீர்– மனிதன்*
*ஆயுளையே நான் முடிப்பேன்*
*மறந்துவிடாதீர்.*

*மலேரியா யானைக்கால்*
*அடங்கி விட்டதால் – நுளம்பை*
*அடக்கிவிட்டோம் என்று எண்ணி*
*அகந்தை கொள்ளாதீர்.*

*டெங்கு நோயை மனிதருக்கு*
*தந்திடுவேனே–எந்தன்*
*குஞ்சு பெருக தண்ணி தேங்கி*
*நிற்க விட்டாலே.*

*பேணி போத்தல் தகரம் சிரட்டை*
*நிமிர்ந்திருந்தாலே– மழை*
*தண்ணி தேங்கி நாட்கள் சில*
*நின்றிருந்தாலே.*

*எந்தன் சந்ததியை ஆயிரமாய்*
*விருத்தி செய்வேனே – இந்த*
*சங்கதியை அறிவீரோ*
*மானுடர் நீரே.*

*சடுதியான காச்சல் வரும்*
*கண்ணில் நோ வரும்– நானும்*
*கடித்துவிட்டால் வாந்தி வரும்*
*மூட்டு நோ வரும்.*

*கடுமையான வயித்துவலி*
*நோ எடுக்குமே– வாய்*
*மூக்கு முரசு வெடித்துமக்கு*
*இரத்தம் பெருகுமே.*

*மலம் கறுப்பாகும் – உடல்*
*வெளிரியே போகும்*
*நா வரட்சியால் தண்ணீர்*
*தாகம் ஏற்படுமே.*

*நான் சிறிசுதான்– கடித்தால்*
*நோய் பெரிதுதான்*
*நாட்கள் கடந்தால் – உமக்கு*
*மரணம் நிஜம் தான்.*

*அற்ப பூச்சி என்று என்னை*
*எண்ணி விடாதீர்– மனிதன்*
*ஆயுளையே நான் முடிப்பேன்*
*மறந்து விடாதீர்.*



தென்புலத்தார்
தொழுதேற்றல்
நூல்நயம்
04

# வீரகாவியம்




( "ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்" என்ற தலைப்பில் நினைவில் வாழும் **வள்ளியம்மை சுப்பிரமணியம்** எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை )

*சோ. தேவராஜா*

### தீண்டாமைக்கெதிரான போராட்டம்:

யாழ் நகரில் சாதியக் கொடுமைகள் தலை விரித்து ஆடின. அரசாங்க அதிபர்கள் கண் துடைப்பாகச் சில நிகழ்வுகளை அரங்கேற்றினர். இருந்தும் அடக்குமுறை தொடர்ந்தது. மலாயன் கபேயில் கூடப் பெரிய போராட்டம் நடாத்த வேண்டி இருந்தது. இந்த நிலைமை, கிராமப் புறங்களில் இன்னும் மோசமாக இருந்தது. கோவில்கள், தேநீர்க் கடைகளில் (உரும்பிராய், நெல்லியடி, சுன்னாகத்தில் நிலத்தில் நைந்து போன சாக்கைப் போட்டிருப்பார்கள் அல்லது நிலத்தில் இருந்து தான் சாப்பிட வேணும்.) சோடாப் போத்தலில் தான் தேநீர் கொடுப்பார்கள்.

1966 ஒக்டோரபர் எழுச்சிப் போராட்டங் களுக்கு முதல், மிக மோசமான நிலையில் தமிழ் மக்கள் சாதியால் பாகுபடுத்தப்பட்டு இருந்தனர். கறள் பேணியில் அல்லது சிரட்டையில் அல்லது போத்தலில் தண்ணி குடுப்பார்கள். மற்றையவர்கள் கதிரையில இருந்து பித்தளைப் பேணியில் தேநீர் குடிப்பர். இந்த நிலைமைகளில் தான் 1966 ஒக்ரோபர் எழுச்சி ஏற்பட்டது. இந்த எழுச்சி 'சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற பதாகையில் ஊர்வலங்கள், கூட்டங்கள் இடம்பெற்றன. கம்யூனிஸ்ட் கட்சி தான் அதை ஏற்பாடு செய்தது. திட்டமிடப்பட்ட எழுச்சி, சுன்னாகத்தில் ஊர்வலத்தை ஏற்பாடு செய்யக் காரணம் வி. பொன்னம்பலம் காலத்தில் இருந்து சுன்னாகம் பிரதேசம் இடதுசாரிகள் செல்வாக்கு கூடிய இடமாக இருந்தது. அங்கு தான் கட்சிக் காரியாலயமும் செங்கொடியைக் கம்பீரமாகப் பறக்கவிட்டபடி இருந்த இடம். அதை விடவும் எஸ். ரி. என். நாகரத்தினமும் அவர் உறவுகளும் புடவைக் கடை முதலாளிகளாகச் செல்வாக்குடன் வாழ்ந்தனர். இவ் எழுச்சி பற்றி நிறைய நூல்கள் வெளிவந்திருக்கின்றன. நிச்சயமாக அவற்றை வாசித்து அன்றைய காலகட்டத்தை விளங்க முற்படுங்கள்.

அக்டோபர் எழுச்சியின் போது தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், கே. டானியல், வீ. ஏ. கந்தசாமி, டாக்டர் சு. வே. சீனிவாசகம், எஸ்.ரி. என். நாகரத்தினம் ஆகியோர் தலைமை ஏற்றுச் சென்றனர். அவர்களுடன் கட்சி வாலிபர் இயக்கத்தைச் சேர்ந்த எம். ஏ. சி. இகபால், கு. சிவராசா, நா.யோகேந்திரநாதன், செந்திவேல், கி. சிவஞானம், கே. சுப்பையா, இரகுநாதன் ஆகியோர் முன்னிலையில் நின்றனர். ஒரு மாபெரும் பொதுகூட்டம் சுன்னாகம் சந்தை வளாகத்தில் 25 நவம்பர் 1966 அன்று நடைபெற்றது. தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கட்சிப் பொதுச்செயலாளர் தோழர் நா. சண்முகதாசன், எஸ். டி. பண்டாரநாயக்க, கே. டானியல், வி. ஏ. கந்தசாமி, சுபைர் இளங்கீரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

இதன் பிரதிபலிப்பாக ஒடுக்கப்படும் மக்கள் மீது வன்முறைகளும் இடம்பெற ஆரம்பித்தன. இந்நிலையில், முன்னாள் கம்பஹா தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த எஸ்.டி. பண்டாரநாயக்க அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடக்கும் சாதி அடக்கு முறைகளையும், ஒடுக்கப் பட்டோர் முகங்கொடுத்த இன்னல்களையும் நேரில் பார்வையிடுவதற்காக 1968ம் ஆண்டு, சில தடவைகள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருடன் ஒரு புத்த பிக்குவும், சில சிங்களத் தோழர்களும் வந்தார்கள். அவர்களுடன் தோழர் மணியம் அவர்களும் உடன் சென்று பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களையும், பிரச் சினைகளையும் காட்டி விளங்கப்படுத்தினார். இந்த நிலையில், "ஏன் தென்னிலங்கை எம்.பி.க்கு இருந்த அக்கறை வடபகுதி தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு இருக்கவில்லையா?" என்று நண்பர்கள் நினைக்கலாம்; பாவம் அவர்கள் ஒடுக்கப்பட்டோர் குடிசைகளுக்குத் தீ மூட்டிய உயர்சாதியினரின் வெறுப்பைத் தேடிக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் கையறு நிலைமைகளையும் எஸ்.டி. பண்டாரநாயக்க கேட்டறிந்து நேரில் பார்த்தார். நிச்சாமத்தில் எரிந்த வீடு ஒன்றை அவர் பார்வையிட்ட படம் இன்றும் அக்கொடுமைகளைச் சொல்லும். (பக் 84)

எஸ். டி. பண்டாரநாயக்க அவர்கள் தான் கேட்ட, பார்த்த நிகழ்ச்சிகள் பற்றிப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுப் பேசினார். அந்நேரம் அது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பிரதிபலிப்பு அடுத்து வந்த தேர்தல் முடிவுகளிலும் வெளிப்பட்டது. உயர்சாதியினர்

அனைவரும் கெட்டவர்கள் அல்ல. ஒரு சில வக்கிர உணர்வு கொண்டவர்களே தீயிட்டு குடிசைகளை அழித்தவர்களாவர். (பக் 84)

இது இப்படி நடக்க, நிச்சாமத்தில் இரு ஜாதியினரிடையே சண்டை உருவானது. ஒடுக்கப்படும் மக்களை உயர்சாதியினர் காவற்படையின் உதவியுட.ன் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர். இதனால் தோழர் நல்லப்பு தலைமறைவாக எங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தார். (பக். 103)

சாதியின் திமிர்த்தனத்தால் தந்தையின் மரணத்தை மறைத்தது மட்டுமல்ல, சுப்பிரமணியம் என்ற குழந்தையின தந்தை அம்பலப்பிள்ளை என்பதையே நினைவுமலரில் மறைத்த குடும்பத்தில் இருந்து அவரது இளைய சகோதரன் இலங்கைநாயகம் சைக்கிளில் வந்தார். உடம்பு முழுவதும் வியர்வையால் நனைந்த சேர்ட். குடிக்கத் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்த பின் கூறினார்.

"நான் விவேகானந்தா அச்சக வேலை முடிந்து வீடு போகும் வழியில், சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சாதியத்தை எதிர்த்த புரட்சிகர முழக்கங்களுடன் பேரணியைச் சின்னண்ணா ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் பிரதான வீதியில் அமைந்திருந்த சுன்னாகம் பொலிஸ் நிலையம் முன்பாகக் குவிக்கப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட பொலீஸ் படையினர் பேரணியை வழிமறித்துத் தாக்கினர். பேரணியில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமான குண்டாந்தடித் தாக்குதல் நடத்தப்பட்டது. மேற்படி தாக்குதலில் தலைமை தாங்கி முன்னணியில் சென்ற சின்னண்ணா இரத்தம் வழிந்தோட பொலீஸ் நிலையத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டார்."

எழுச்சியான அந்தத் தினம் என்னால் மறக்கவே முடியாத நாட்களில் ஒன்றாகிப்போனது. இரவு நெடுநேரமாகியும் தந்தையைக் காணாது காரைநகரில் உள்ள வாடகை வீட்டில் குழந்தைகள் மூன்றும் கத்தி அட்டகாசம் பண்ண – சாதி மறுப்பு மணம் புரிந்ததால் சொந்தமும் இல்லாது, உதவிக்கும் யாருமில்லாது பயத்துடனே நான் இருந்தேன்.

"ஊர்வலம் போனவர்களைக் கைவிலங்கு மாட்டி அடைத்து வைத்திருக்கிறோம், நாளை காலை இன்ஸ்பெக்டர் வந்த பின் தான் விசாரித்து, வழக்குப் பதிந்து விடுவோம்..." என்று பொலிஸ் கூறினார்கள் என்றார் வந்தவர். சகோதர பாசமல்லவா? கேள்விப்பட்ட பின் வீட்டிற்குப்போக மனம் வராமல், சுன்னாகம் எங்கே...? காரைநகர் எங்கே...? அந்த 9 பாலங்களும் எதிர்க்காற்றில்... சைக்கிள் ஓட்டி வருவதென்றால் சாதாரண காரியமா? (இலங்கைநாயகம் அவர்கள் அண்ணரின் அரசியல் சார்பற்ற ரஷ்ய கம்யூனிஸ்ட்– பீற்றர்கெனமன் கட்சியைச் சார்ந்தவர்) "சின்னண்ணாவைச் சுன்னாகம் பொலீஸ் பிடித்து நல்லாய் அடித்து மறியலில் வைத்திருக்கினமாம். நாளைக்குக் காலமை போய்ப்பார்த்திட்டு வந்து சொல்லுறன்" எண்டார். நான் கத்தி அழ, என்னோடை சேர்ந்து குழந்தைகளும் அழ, அவரும் அழுதார்.

அடுத்த நாள் பொலிஸ் குண்டாந்தடி அடிகளின் வீரியம் உடம்பு முழுதும் திரணையாக வீங்கி வெதும்பி வந்தார் தோழர். தோழரின் வரவிற்காய் கைவிளக்குடன் நெடுநேரம் காத்திருந்தேன். கத்தரி கொண்டு உடுப்புகளை அகற்றினேன். குழந்தைகளின் சித்தப்பா இலங்கைநாயகம் அவர்கள், எமக்கு கூறிய விபரத்துக்கு மேலதிகமாக உடம்பு முழுவதும் கொழுக்கட்டை போன்ற வீக்கத்துடன் கூடிய பல அடையாளங்களுடன் இரண்டு கைகள் தோள் மூட்டிலிருந்து முழங்கை வரை, முதுகுப்புறம் தடியடி கண்டல் அடையாளங்கள் சகிதம் பகல் ஒரு மணியளவில் தோழர் வீடு வந்தார். குழந்தைகள் அழுவார்களென்று சிரித்து மழுப்பிக் கதைத்தார்.

அவ் ஊர்வலத்தில் தோழர்கள் ஆர்.கே. சூடாமணி, கே. ஏ. சுப்பிரமணியம், வி.ஏ.கந்தசாமி, எஸ்.ரி. என். நாகரத்தினம். Dr சு.வே. சீனிவாசகம், கே. டானியல் எனப் பலரும் கலந்து காயப்பட்டனர். கைது செய்யப்பட்ட வீ. ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம, ஆர். கே. சூடாமணி ஆகிய மூவரும் மருத்துவச் சிகிச்சைக்காக ஜாமீனில் விடுதலையானார்கள். ஆனால், நீதிமன்ற வழக்கு சில ஆண்டுகள் தொடர்ந்தது. குற்றவாளிகள் சார்பாக, அனைத்துலக அரசியல் சட்ட நுணுக்கங்களில் அசாத்தியமான நுண்ணறிவும் திறனும் கொண்ட சட்ட நிபுணர் நடேசன் சத்தியேந்திரா ஆஜராகி விடுதலை பெற்றுக் கொடுத்தார். அந்த நாட்கள் இன்று நடந்தது போல இருக்கிறது. அதை ஒட்டிய கனவுகள் இன்று வரையும் என்னை இரவில் பயமுறுத்துகின்றன.

1977ம் ஆண்டு எனது மகள் வயசுக்கு வந்துவிட்டார். ஒரு நிகழ்வை வ.சு தனது சத்தியமனையில் நடத்தினார்.

அதில் 'ஆலாத்தி' எனப்படும் நிகழ்வும் சிறப்புற நடந்தது. திருமதி. பரிபூரணம் இராசசுந்தரம் (பரி அன்ரி) வந்திருந்து வாழ்த்திச் சென்றார். எனது தங்கை குடும்பம், அக்காவின் மகள் குடும்பம் வருகை தந்திருந்தனர். எனது மாணவிகள் சகலரும் வந்திருந்தனர். மதிய போசன வேளை நேரம் எங்கள் ஆசிரியைகளுள் ஒருவர் "நான் அவசரமாக வீட்டிற்குப் போக வேண்டும்" என்று கூறிப்

புறபட்டார். அவர் போன பின்னர் தான் தெரிந்தது. 'அவவின் தோட்டத்தில் மிளகாய்ப்பழம் ஒடிக்கிற ஒரு நிற்சாமத்துப் பெண்மணி எங்கள் வீட்டில நிற்கிறாவாம். அவவும் தானும் ஒரே சபையில் இருந்து சாப்பிட்டால், தனது கௌரவம் என்னாவது?' என்று கூறித்தான் போனாவாம். பிறைச்சூடிக் குருக்களின் அக்கா புஸ்பமும் ஒரு ரீச்சர்தான். அவர்கள் ஒருவரும் வந்து நிற்கிறவர்கள் என்ன சாதி' என்ற ஆராய்ச்சியில் இறங்கவில்லை. அந்த ஒருவருக்குத்தான் "சாதித் திமிருடன் வாழுந் தமிழன் ஓர் பாதித் தமிழனடா..." என்ற பாடல் பொருந்தும் போலும். (பக் 126)

வந்திருந்த அனைவரும் மகளை வாழ்த்தி, உணவு உண்டு புறப்பட்டுப் போனார்கள். அந்த ஒரு ரீச்சரின் செயல் மட்டும் நீண்ட நாள் என் மனதை விட்டு அகலவில்லை. தமிழரே மற்றத் தமிழரை, ஓரங்கட்டி நடத்துகிற நிலையோடு, சிங்கள மக்களை ஒப்பிட்டுப் பார்த்தேன். வீட்டிற்கு வந்த சிங்கள மக்களிடம் அன்பை மட்டுமே கண்டேன். இது பற்றித் தோழரிடம் சொன்னபோது,

" நீ எம் தோழர்களை மட்டுமே பார்த்திருக்கிறாய், ஏற்றத்தாழ்வு என்பது பரந்து நிற்கிறது. இதை மாற்றவே முயல்கிறோம். எப்போது உன்னைப் போலெல்லோரும் இணைந்து நிற்கிறார்களோ? அப்போ தான் இவை சமப்படும்." என்றார். (பக். 126)

### விடுதலைத் தேசியத்தில் மீரான் மாஸ்ரர்

1983ல் அதிகாலை எம்வீட்டு லைட்கள் திடீரென எரிந்தன. எழுந்து பார்த்தால் எங்களைச் சுற்றி இராணுவம்" (பக்கம்–152) 'சுற்றி நின்ற இராணுவம்," சத்தியராஜன் சுப்பிரமணியம், மீரான் மாஸ்ரர், என்று கனக்க கேட்க ஆரம்பித்தனர்.

மேஜர், தோழரையும் அவரது அரசியலையும் பற்றி அக்குவேறு ஆணிவேறாகச் சொன்னார்.

"மகனைத் தங்களிடம் ஒப்படைக்கும் வரையில் கே. ஏ. சு ஆனையிறவு இராணுவ முகாமிற்கு மாதத்தில் ஒரு நாள் வந்து பதியவேண்டும்"(பக்கம்–153) எனக் கட்டளையிட்டார்.

வ.சு உடனே இராணுவ மேஜரிடம் கூறினார். " மகனின் நடவடிக்கை பிடிக்காமல் அவரை நாங்கள் வீட்டிற்குள் அனுமதிப்பதில்லை. அவர் எங்கு இருக்கிறார் என்பதே தெரியாது. தந்தை சிங்கள தமிழ் மக்களின் மேம்பாட்டிற்காகவும், தேசத்தின் ஒற்றுமையை வலியுறுத்தும் அரசியலுக்காகவும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார். அதனை விட அவர் நோயாளி. வருவது கஷ்டம்" (பக்கம்–153).

மேஜர், "அப்பா தனக்காக இவ்வளவு கஷ்டப்படுகிறார் என அறிந்தால் உங்கள் மகன் இயக்கத்தை விட்டு விலகி, உங்கள் மகனாக உங்களிடம் வருவார்" என்றார்.

தோழர் கே.ஏ.சு தன் இணையர் வ.சுவிடம் கூறுகிறார். "எல்லாமே முன் முடிவுடன்தான் செயற்பட்டு இருக்கிறார். கேட்டால் ஒண்டுமே தெரியாது என்கிறீர்கள். 'தாயின் மூக்கை கடித்த திருடன் கதை தெரியும்தானே" என்றார். சிலதை மறைத்தேன். ஆனால் அன்று எனக்கு ஒன்றுமே தெரியவில்லை (பக்கம்–153) என்கிறார் வ.சு.

தோழர் கவலையாக இருப்பது இரவியையும் வருத்தியது. " ஆனையிறவு போகத்தான் வேண்டுமானால் துணையாக நானும் வருகிறேன்" என்றார். (பக்கம்–153)

மகன் சத்தியராசன் விடயத்தில் கே.ஏ.சு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. இதனால் 'அயலவர்கள், இராசரின் அப்பா மற்றவர்களுக்கு கஷ்டம் வந்த போதெல்லாம் ஓடிச்சென்று உதவுவார். இராசனின் விஷயத்தில் அக்கறை அற்று இருப்பதாக குறை சொன்னார்கள்' (பக்கம்–193) என்று வ.சு குறிப்பிடுகின்றார்.

'ஆனால் பிழையான அரசியலை தேர்ந்தெடுத்த கோபம் இருந்தாலும், மூத்த குழந்தையின் பிரிவின் வலி அவருள் தெரிந்ததை நான் உணர்ந்து கொண்டேன். ஆனால் அதை மேவி தேசிய ஒற்றுமை பற்றியும், சிறுபான்மையினரின் சுதந்திரம் பற்றியும் எழுதியபடியும் பேசியபடியும் இருந்தார்'(பக்கம்–194) என கே.ஏ.சு வுக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கின்றார்.

தமிழ் தேசிய போராட்டம் ஏன் விடுதலைத் தேசியப்போராட்டம் ஆக இயலாது, போலித் தேசியத்துள் ஏன் தன் தலையை புதைத்துக்கொண்டது என்பதற்கு இந்நூல் பல சான்றுகளை தன்னகத்துள் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணக்கோட்டை இராணுவவளாகத்தினுள்தான் வங்கியும் இயங்கியது. 1983 கலவரத்தின் பின் வெளிநாடு சென்ற பிள்ளைகளின் தாய்மார் "பாவம் செய்தவளவை கைதியை பார்க்கப் போட்டு வருகினம். நாங்கள் செய்த புண்ணியம் எங்கடையள் தப்பிப் போய் அங்க இருந்து அனுப்பும் பணத்தை எடுக்க வந்திருக்கிறம்" (பக்கம்–167) என்று எமது காதுபட கூறிய தாய்க்குலத்தின் குரலையும் கேட்டுக்கொண்டு வெளியே வந்தோம்' என்று வ.சு தனது கைதி மகனை பார்க்கச் சென்ற சமயம் கேட்டவற்றை பதிவு செய்கிறார்.

மேலும் இச் சம்பவ நிகழ்வைப் பற்றிய தனது கணிப்பை வெளிப்படுத்துகிறார். 'எம் சமூக கட்டமைப்பு பக்குவம் அடையாமைக்கு அரசியல் அறிவுப் பஞ்சமே காரணம். அதனை சரியாகப் பிரயோகிக்காமல் தேர்தலை முன்னிறுத்தியே அன்றும் இன்றும் அரசியல் செய்யப்படுகிறது' (பக்கம்–167) என்பது வ.சு வின் கருத்தாகும்.

வ.சு அவர்கள் 1976 இல்

வட்டுக்கோட்டை தமிழ்ஈழத் தீர்மானம் எடுக்கப்பட்ட சமயத்தில் 'வாக்குகள் பெறுவதற்கு வட்டு மாநாடு. தேர்தலில் வெற்றிபெறத் தெருவில் முழக்கம். பிரச்சினை தீரப் புரட்சியே மார்க்கம்' என இவர் எழுதிய கோசங்கள் வட்டுக்கோட்டை சுவர்களை அலங்கரித்தமையை இவ்வேளை நினைத்துப் பார்க்கிறேன்.

தமிழ் தேசிய இயக்கத்தில் சத்தியராசன் மீரான்மாஸ்ரராக மாறிய தகவல்களையும் பகிர்ந்து கொள்கிறார். 'என் மூத்த மகன் தாத்தா, ஆச்சி வீட்டில் விளக்கு வைக்கப்போவதாகச் சொல்லி விடுதலைப் போராளிகளுடன் சந்திக்கும் இடமாகவும், தங்க வைக்கும் இடமாகவும் அதனை மாற்றிக் கொண்டார். பகல் பொழுது முழுவதும் ஆரம்ப போராளிகளின் காவல் அரணாகச் செயற்பட்டார்.'(பக்கம்–141)

" 1982 –ஜனவரி 2 சனிக்கிழமை அன்று அதிகாலை சித்திரா அச்சகத்தில் என் தம்பியாக உணர்ந்த விடுதலைப்போராளி சுந்தரத்தை சுட்டுக் கொன்றார்கள். இதனை அறிந்த தோழர் கே.ஏ.சு தனது மகளின் பாடசாலை அனுமதி பற்றி சுண்டிக்குளி புறப்பட்டவர் அங்கு செல்லாமல் மீண்டும் சுழிபுரம் திரும்பினார். இந்த விடயம் எல்லோரையும் பாதித்தது. மாக்சிய அறிவையும், சந்தேகங்களையும் தீர்க்கப் போராளி சுந்தரம் அடிக்கடி வந்துபோய் அன்பையும் வளர்த்துக்கொண்டார். மூத்தவர் ராஜன் கடும் சினம் கொண்டார். இதன் விளைவை அன்று நான் உணரவில்லை." (பக்கம்–141) என வ.சு.குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில் " தோழரின் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டால் மூன்று குழந்தைகளும் ஓடிப்போய்ச் சைக்கிளை வாங்குவார்கள். பின் கால் கழுவி வீட்டிற்குள் வருவார். அன்று அவர் வந்ததும் இராசர் இல்லை. எதுவும் கேட்கவில்லை. "குழந்தைகள் சாப்பிட்டார்களா? இன்று என்ன நடந்தது...?" என வழமையான கேள்விகளைக் கேட்ட போது, மகள் அழுதபடி "அண்ணாவை காணவில்லை" என்றார். (பக்கம்–142)

'இராசரின் அரசியல் சேர்க்கை மனதிற்கு வேதனை தந்தது. கணவரைத் தேடி காவற்படை வந்த காலம் போய் மகனை தேடி இராணுவம் வரப்போகிறது என பயமும் வந்தது.' (பக்கம்–143) என மீரான் மாஸ்ரரின் சேர்க்கையும் அவரின் செயற்பாடுகளையும் மட்டுமன்றி புளோற் (PLOTE) இயக்கத்தின் நடவடிக்கைகளையும் வ.சு தொடர்ந்து வெளிப்படுத்துகிறார்.

'1981 ல் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது தொடர்பில் சதாசிவம் சிவசண்முகமூர்த்தி என்ற சுந்தரத்தையும் கணபதிபிள்ளை கதிர்காமு கந்தசாமி என்ற சங்கிலியனையும் கணபதிபிள்ளை சிவனேசன் என்ற பாலமோட்டை சிவத்தையும் தேடி வந்த இராணுவத்தினர், பண்ணாகம் ஆறுமுகம் சேயோன் உட்பட பலரைக் கைது செய்தனர்' (பக்கம்–144)

'1982 ல் யாழ் காரைநகர் றோட் பாணாவெட்டி சந்தியில் ரோந்து சென்ற கடற்படையினர் மீது நடத்திய தாக்குதலை தொடர்ந்து அயலவர் குழந்தையும் (கணபதிபிள்ளை மயில்வாகனம்) சுழிபுரம் மயில்வாகனம் சின்னையாவையும் கைது செய்தனர்' (பக்கம்–144)

'1983 மேயில் வவுனியாவில் விமானப்படையினர் மீது தாக்குதல் நடாத்திய போது காயமடைந்த அமிர்தலிங்கம் இராமநாதன் என்ற அற்புதத்தை காப்பாற்றிய பண்ணாகம் சிதம்பரநாதன் என்ற குமார் வீர மரணமடைந்தார்.'

"எமது அயலவர் மனோன்மணி ரீச்சரின் மூத்தமகன் ஆர். ஆர் எனப்படும் வேலாயுதம் நல்லநாதரும் காணமால் போய்விட்டார்." (பக்கம்–144)

'1983 ஜூலை 23 ல் திருநெல்வேலிச் சந்தியில் விடுதலை புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனைத்தொடர்ந்து வெலிக்கடைச் சிறையில் தொடர்ந்து இரண்டு நாட்கள் தமிழ் அரசியல் கைதிகள் மீது நடாத்திய தாக்குதலில் முன்குறிப்பிட்ட மூவரும் தங்கத்துரை, குட்டிமணி உட்பட 52 பேர் கொல்லப்பட்டனர்.

– அடுத்த இதழிலும் நூல்நயம் தொடரும்

□

***கிளிநொச்சியில் வ, சிவசோதி பிறந்தநாள் நிகழ்வில் மாணவர் களுக்கு எங்கள் முற்றம் சஞ்சிகை, புத்தகங்களுடன் உண்டியல் களும் மக்கள் கலை இலக்கியப் பேரவை அமைப்பாளர், சிரேஷ்ட சட்டத்தரணி சோ. தேவராஜா அவர்கள் வழங்கினார்.. வீடுகள் தோறும் எங்கள் முற்றம் புத்தக அரங்கப் பண்பாட்டை உருவாக்குவோம்.***





# வேதாளமும் முருங்கையும்

**-5-**

*அசன்*

இளம் வயதிலே செய்வதற்கு எதுவும் இல்லாமல் சும்மா இருப்பது கொடுமையிலும் கொடுமை. எப்ப முடிந்து தொலைக்கும் என்று நினைத்த பள்ளிப் படிப்பு முடிந்துவிட்டது. விக்கிரமாதித்தனின் பல்கலைக்கழக கனவை தரப்படுத்தல் தணிக்கை செய்துவிட்டது. அத்தி பூத்தாற்போல் வரும் அரச வேலைவாய்ப்புகளைத் தேடி பண்டத்தரிப்பு தபால் நிலையத்தில் வர்த்தமானியை மேய்வது மாதாந்தக் கடமைகளில் ஒன்றாகியது. சங்கானை நகர சபை வாசிகசாலை ஒன்றுதான் விக்கிரமாதித்தனின் பகல் பொழுதை கொல்ல உதவுகிறது. மாலை ஐந்து பள்ளி முடிந்து நண்பர்கள் மன்றத்தில் கூடுமட்டும் மணிக்கூட்டு கம்பி அசைய மாடடேன் என்று அடம் பிடிக்கும்.

இந்த நேரத்தில்,

"மன உளைச்சலை போக்க உனக்கு ஒரு கதை சொல்லிறன் கேள்" என்று வேதாளம் துவங்கியது.

"கதையைச் சொல்லு. ஆனால் கேள்வி வேண்டாம்"

ஒப்பந்தத்தை ஏற்ற வேதாளம் துவங்கியது.

பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு சித்தி அடைந்ததும் ஐயாவின் ஆசையை பூர்த்தி செய்ய மணியம் இங்கிலீசிப் பள்ளிகுடம் என்று அழைக்கப் பட்ட சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் சேர்ந்து கொண்டான். அங்கே இப்போது இங்கிலீசில் பாடம் நடத்துவதில்லை என்ற தாற்பரியங்கள் ஐயாவுக்குத் தெரியாது. ஊரிலே எல்லோரும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு போக மணியம் என்னும் நாலைந்து பேர் புடை சூழ விக்டோரியாக் கல்லூரிக்கு இரண்டு மைல் நடந்து போய்வந்தான். சைக்கிளில் போகும் எட்டாம் வகுப்பு சீனியர்கள் வலிந்து கேட்டாலும் அவர்கள் கரியர்களிலோ பார்களிலோ ஓசிச் சவாரி செய்ய ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை. ஆனால் அவர்களை பார்க்கும் போதெல்லாம் எப்போது எட்டாம் வகுப்பை எட்டுவோம் என்ற ஏக்கம் மட்டும் எழத் தவறுவதில்லை.

ஒரே ஒருமுறை மட்டும் மாமனாரின் பாரில் இருந்து யாழ்ப்பாண நகருக்கு பயணித்தது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1962 மார்ச் மாதம் நகரில் இலவசமாக இளநீரும் வடையும் கொடுக்கிறார்கள் என்று மாமா அழைத்ததால் அவரின் சைக்கிளில் தொற்றிகொண்டான். மாமனோடு அவரின் கூட்டாளிகளும் எட்டு மைல் சயிக்கிள் ஓடி நகரை அடைந்தனர். அங்கே போனால் எல்லோரும் வெள்ளை வேட்டி வெள்ளை சட்டைகளுடன் குழுமி இருந்தனர். அவர்களுக்கு சாரத்தோடு நிற்கும் சில எளிய மக்கள் இளநீரை சீவிச் சீவிக் கொடுக்கிறார்கள். வெறும் சாரத்தோடு போன இவர்களுக்கு கிட்டப்போய் வாங்க வெக்கம் விடவில்லை. ஆனாலும் சின்னவன் மணியத்தை ஏவி விட்டார்கள். மணியமும் தயங்கித் தயங்கி இளநீர் குலைகளின் கிட்டே போய் வாயை பிளந்து பார்த்துக்கொண்டே நின்றான். இளநீர் வழங்கியவர்களோ இவனை ஒரு கணக்கில் எடுக்காமல் வெள்ளை வேட்டிகளுக்கு சேவகம் செய்து கொண்டிருந்தார்கள். பொறுத்து பார்த்து ஏலாமல் மெதுவாக,

"'அண்ணை என்னையும் கவனியுங்கோ" என்று இரகசியம் பேசினான்.

"இது சத்தியாகிரகம் இருக்கிறவைக்கு. உங்களுக்கில்லை" என்று வடை கொடுத்த வள்ளல் தீர்ப்பளித்தார்.

அவமானம் தாங்காமல் மணியம் வெளியே வந்தான். இலவசமாக இளனியும் வடையும்

வேணுமெண்டால் வெள்ளை வேட்டியோடு சத்தியாகிரகம் இருக்க வேணும் என்ற அற்ப விஷயத்தை கூட அறிந்திராத மாமாவை மனதுக்குள் திட்டிக் கொண்டான். ஆனால் மாமாவும் அவரது நண்பர்களும் அடுத்த நாள் வேட்டியோடு வந்து கலந்துகொளவதாக தீர்மானம் நிறைவேற்றி மீண்டும் எட்டுமைல் சயிக்கிளை மிதித்து வீடு சேர்ந்தனர். ஆனால் மானம் ரோஷமுள்ள மணியம் இந்த சென்மத்தில் எந்தவொரு சத்தியாகிரகத்திற்கும் போவதில்லை என்று முடிவெடுத்தான்.

எழாம் வகுப்பு வந்தவுடனேயே 'எட்டாம் வகுப்புக்கு சைக்கிள் வேணும்' என்ற மந்திரத்தை மணியம் தினமும் தாயூடாக தந்தைக்கு ஓதத் துவங்கினான். 'முதல்ல சீற்றிலை இருந்து ஓடப்பழகு' என்றார் ஐயா. பாரின் கீழால் காலை நுழைத்து பிறி விலில் ஓடியே அவனுக்கு பழக்கம். சீற்றைப் பதிச்சுத் தந்தால் நான் ஓடிக் காட்டிறன் என்று சவால் விட்டான் மணியம். அம்மாவும் அவனுக்கு ஆதரவு தர சீட் பதிக்கப்பட்டது. ஐயா பாவிக்காத நேரமெல்லாம் சைக்கிள் இரவு பகலென்றிலாமல் வெற்றிமட முரு கனைச் சுற்றிச் சுற்றி வந்தது. இறுதியில் முருகன் மனமிரங்கி ஐயாவின் வாயால் 'இனி சைக்கிள் உனக்குத்தான்' என வரம் அருளினார்.

ஏற்கனவே பழைய இரும்புக்கு போடும் பக்குவத்தில் இருந்த சைக்கிள் இடைவிடாத பயிற்சியால் மேலும் தளர்ந்திருந்தது. இதைப் புதிசு போல் இளமை ஊட்டும் நுட்பம் தெரிந்தவர்கள் பண்டத்தரிப்பு அம்பாள் ஸ்டோருக்கு பக்கத்திலுள்ள உள்ள சைக்கிள் கடைகாரர்கள் என்று ஊரே சொன்னது. மார்கழி விடுமுறையில் ஒருநாள் காலை முழு சேர்விசுக்காக சயிக்கிள் மெக்கானிக்கிடம் கையளிக்கப்பட்டது. ஒரு பெரிசும் இரண்டு சிறிசுகளும் மணியத்தையும் சயிக்கிளையும் ஆய்வு செய்தனர். மணியம் பக்கத்திலிருந்து ஒவ்வொரு வேலையையும் உன்னிப்பாக அவதானித்தான். ஒரு பத்து நிமிடத்துள் சைக்கிள் முழுவதும் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரிக்கப்பட்டு தரையில் கிடத்தப்பட்டது. பெருசு ஒவ்வொரு பாட்சுகளாக ஆராயத் துவங்கியது

என்னென்ன பாட்சுகள் இந்தக் கடையிலே சமாதியாகுமோ என்று ஏக்கத்தோடு மணியம் காத்திருந்தான். ஆழ்ந்த ஆய்வின் முடிவில் எந்தப் பகுதிகள் திருத்தப்படக் கூடியவை, எந்தப் பகுதிகள் மாற்றப்பட வேண்டியவை என்ற அறிக்கையை பெரிசு வெளியிட்டது. இங்கிலிசு பாட்சுகளால் மாற்றீடு செய்வது அதிக செலவென்றும் இந்திய பாட்சுகள் ஒரு வருடத்துக்கு மேல் தாங்காதென்றும் ஜப்பானிய பாட்சுகளே நல்ல தெரிவு என்றும் வழங்கப்பட்ட ஆலோசனையை மணியம் ஏற்றுக்கொண்டான்.

ஜொயின்டுகள் எல்லாம் புதிய வெள்ளிக் குண்டுகளால் அடுக்கப்பட்டு கிறீசால் நிரப்பப்பட்டு இயக்கங்கள் சுளுவாக்கப்பட்டன. பிரேக் கட்டைகள் மாற்றப்பட்டு குதிக்கால் தேயத்தேய தடுப்புகள் போடும் தேவை தவிர்க்கப்பட்டது. துருக்கள் எண்ணெய் களால் அகற்றப்பட்டு வண்ணமும் கொடுக்கப்பட்டு மின்னத் துவங்கின. சில்லின் வளையம் நுட்பமான கருவியில் சுழற்றப்பட்டு கறள் பிடித்த வளைந்த கம்பிகள் அகற்றப்பட்டு புதிய கம்பிகள் போடப்பட்டு இறுக்கப்பட்டு நேராக்கப்பட்டன. தூங்கித் தூங்கி நிலத்தை முத்தமிட முனைந்த செயின் இறுக்கப்பட்டு இளமை ஊட்டப்பட்டது. நிர்வாணமாய்க் கிடந்த பெடல் கம்பிகள் காண்டில்கள் புதிய இறப்பர் அணிகளால் அழகு செய்யப்பட்டன. மூன்று மணித்துளிக்குள் எல்லாச் சடங்குகளும் நிறைவேறின. இறுதியில் போனஸாக சீட் கவர் உட்பட்ட சில அலங்கார சமாசாரங்கள் இணைக்கப்பட சயிக்கிள் புது மணப்பெண் போல் கிறங்கடித்தது. ஓட்டிப் பார்க்க வீதியில் இறங்கியபோது சயிக்கிள் இதுவரை எழுப்பிய எல்லா ஒலிகளையும் மெக்கானிக் அடக்கி ஒடுக்கி விட்டது தெளிவாய்த் தெரிந்தது. எதிர்பார்த்தைவிட அதிக செலவென்றாலும் மகிழ்சியோடு கொடுத்துவிட்டு ஒரு இளவரசன் குதிரையிலே ஊர்கோலம் போகும் உணர்வோடு தெருவில் இறங்கினான் மணியம். ஊரெல்லாம் தன்னையும் தன் சயிக்கிளையும் பார்த்தது நாவூறு பட்டுவிடும் என்று தாயிடம் முறையிட்டான்.

இதற்குப் பின்னர் மணியத்தின் எந்த முக்கி யமான வரலாற்று நிகழ்வும் இந்தச் சயிக்கிள் இல் லாமல் எழுதப்பட்டது கிடையாது. இந்தச் சைக்கிளின் வரவோடு அவனுடைய அடிப்படை அமைப்பு விதிகளில் கூட சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. சயிக்கிளை அலங்கரிப்பதற்கும் திருத்துவதற்கும் மட்டுமே இனிமேல் சல்லி முட்டி உடைக்கப்படவேண்டும் என்பது அதில் பிரதானமானது. இயலுமானவரை பாரில் ஒருவரையும் ஏற்றக்கூடாது என்பது இன்னொன்று. பாரின் பலத்திலேயே சைக்கிளின் ஆயுள் தங்கியுள்ளதாக சைக்கிள் மெக்கானிக் அருளிய ஆலோசனையின் அடிப்படையில் இந்த சட்ட இணைப்பு உருவாக்கப்பட்டது. இதில் சைக்கிளின் பாரம்பரிய உரித்துடைய ஐயாவுக்கு கூட விதி விலக்கு அளிக்கப்படவில்லை.

இந்தச் சையிக்கிள் தனது ஆளுமையைத் திடீரென பனை அளவுக்கு உயர்த்திவிட்டதாக அவன் உணரத் தலைப்பட்டான். சயிக்கிளின் எடுப்புக்கு இழுக்கு ஏற்படாத வகையில் மணியம் தனது உடை

சிகை அலங்காரத்தையும் மெருகேற்றினான். அடிக்கடி செல்லமாக புதிதாக பொருத்திய மணியை கிலுக்கித் தனது சயிக்கிளின் வரவைத் தெருவெங்கும் பறை தட்டி னான். அந்த மணி ஓசை அவனுக்கு ஒரு அற்புதமான இசை தரக்கூடிய கிளர்ச்சியை ஊட்டியது. மணியத்தின் இளமைப் பருவம் சயிக்கிளுக்கு முன் சயிக்கிளுக்குப் பின் என இரு வேறுபட்ட பரிணாமங்களைக் கொண்டது என அவனின் வரலாற்றை அறிந்தவர்கள் குறிப்பிடுவர்.

ஒரு சயிக்கிளை எப்படிப் பராமரிக்கவேண்டும் என்று மணியத்தைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும்படி அயலவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுவது வாடிக்கையாகிவிட்டது. தியேட்டரில் படம் பார்க்கும்போது அவன் கண் திரையிலும், கவனம் சைக்கில் கொட்டகையிலும் இருப்பது அவர்களுக்குத் தெரியாது. திருவிழாக்களில் அடிக்கடி ஒண்டுக்கு என்று போய் சயிக்கிளைப் பார்த்து வருவதும் அவர்களுக்கு தெரியாது. பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பு முடிவிலும் தற்செயலாக சயிக்கிள் தரிப்பிடத்தைக் கடந்து செல்வதாக பாவனை பண்ணிக்கொள்ளுவான்.

1974 இல் தமிழாராச்சி மாநாடு நடந்த ஒன்பது தினங்களும் யாழ்ப்பாணம் திருவிழா நகரானது. ஒவ்வொரு நாளும் மாநாட்டுக் கொடி சயிக்கிளில் பறக்க நண்பர்களுடன் நகர்வலம் சென்றான் மணியம். உலகெங்குமிருந்து வந்த தமிழ் அறிஞர்களின் பேச்சைக் கேட்க வீரசிங்கம் மண்டபத்துக்குச் சென்றார்கள். உள்ளே கருத்தரங்கு நடந்துகொண்டிருந்தது கண்ணாடி போட்ட கதவினூடாக தெரிந்தது. பல நூறு பேர் கொள்ளக்கூடிய மண்டபத்தில் ஒரு ஐம்பது பேரளவில் உள்ளே இருந்தார்கள். இடம் கிடைக்கும் என்ற மகிழ் வில் மூடியிருந்த கதவைத் தட்டி பார்த்தார்கள்.

வெளியே வந்தவர்,

"அனுமதி சீட்டு உள்ளதா?" என்று கேட்டார்.

"இதற்கு அனுமதிச் சீட்டுத் தேவையா? எங்கே வாங்கலாம்?"

"அதெலாம் வாங்க முடியாது. முன்கூட்டியே பதிவு செய்திருக்க வேணும்"

"இடம் சும்மாதானே இருக்கிது. நிரம்பினால் வெளியிலே போறோம்"

"தம்பியவை இது திருவிழா இல்லை. ஆராச்சி மாநாடு. இதிலை உங்களுக்கு என்ன வேலை?"

மீண்டும் மணியத்தின் மானம் ரோஷத்துக்கு சோதனை வந்தது. தமிழ் மேல் கொண்ட அபிமானத்தால் கலிங்கத்துப் பரணியைக் கூட கஷ்டப்பட்டு படிச்சுக் கொண்டிருந்த காலம்.

"இப்பிடி நாலு மொட்டையளை வச்சுதான் மாநாடு நடத்திறதெண்டால் இதை அரசாங்கம் கேட்ட மாதிரி அரசாங்க சிலவில கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திலேயே நடத்தியிருக்கலாமே!

ஒரு வாதமும் எடுபடவில்லை. மண்டபத்தைச் சுற்றி சுற்றி வந்ததில் ஒரு பொட்டுகளை கூட காணவில்லை. நல்லாய்தான் கட்டியிருக்கிறான். ஒவ்வொரு நாளும் போய் கதவு தற்செயலாய் திறந்திருக்காதோ என்று இலவு காத்ததுதான் மிச்சம்.

ஒன்பது நாட்கள் ஆய்வு முடிந்து பத்தாம் நாள் மாலை தமிழ் அறிஞர்கள் மண்டபத்துக்கு வெளியே மேடையில் பேசுவார்கள் என்ற அறிவிப்பு ஆறுதல் பரிசாக வந்தது. அன்று மதியமே மணியமும் நண்பர்களும் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் உள்ள சிறிய புல்வெளியில் இடம் பிடித்துவிட்டார்கள். மண்டபத்திற்கு கிட்டவே சயிக்கில்களையும் விட இடம் கிடைத்ததில் மணியத்துக்கு மகா திருப்தி. நேரம் செல்லச் செல்ல மக்கள் அலை அலையாக வேலியைக் கடந்து, வீதியைக் கடந்து, முத்த வெளியைக் கடந்து கோட்டையை முட்டிவிட்டார்கள். அதற்குள் யாரோ "முத்தவெளியில் கூட்டம் போட அனுமதி எடுக்கவில்லை. இப்ப என்னசெய்கிறது?" என்று குண்டை போட்டார். நல்ல வேளையாக ஒரு புத்திசாலி "மேடை மண்டப வளவுக்குள்தானே இருக்கிறது. மக்கள் முத்தவெளியிலே நிக்கறதுக்கு நாங்கள் பொறுப்பில்லை" நெஞ்சுள் பால் வார்த்தார். கூட்டத்தை வைப்பதா இல்லையா என்ற வாதத்தில் ஒரு மணித்தியாலம் போனது. ஏழு மணிக்கு சம்பிரதாய சடங்குகள் முடிய முதலாவதாக தமிழகத்தில் இருந்து வந்த ஒரு முஸ்லீம் அறிஞர் எடுத்த எடுப்பிலே யாழ்குடி மக்களை உணர்வின் உச்சத்துக்குக் கொண்டு சென்றார்.

அவர் பேசத் துவங்கி சில நிமிடத்துள் ஆயிரக் கணக்கில் நிறைந்திருந்த சனக்குவியலின் பின்னால் சிறு சலசலப்பு கேட்டது. என்ன நடந்தது என்ற செய்தி பின்னால் இருந்து மேடைக்கு அருகில் இருந்த மணியம் குழுவினருக்கு வருவதற்கிடையில் அது அடங்கிவிட்டது. போலீஸ் ஜீப்பில் வந்து வீதியை விட்டு விலகுமாறு உறுமியதாகவும் மக்கள் அவர்களை துரத்திவிட்டதா கவும் செய்தி. அது பின்னால் வந்தவர்களின் பிரச்சினை என அதில் கவனம் கொள்ளாமல் அறிஞரின் பேச்சில் உருகி இருந்தது முன்னால் இருந்த கூட்டம். கொஞ்ச நேரத்தில் மீண்டும் சலசலப்பு. கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க பின்னால் இருந்தவர்கள் எழும்பத் துவங்கினார்கள். என்ன நடக்கிறது என்று புரியாத பேச்சாளர் தமிழின் பெயரால் அமைதியாக இருக்கும்படி திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டார். ஆனால் அது அடங்கவில்லை. திடீரென சில வேட்டுச்



சத்தங்கள் கேட்டன. போலிஸ் சுடுவதாக கூறிக்கொண்டு எல்லோரும் அல்லோலகல்லோல பட்டுக்கொண்டு முன்னால் ஓடி வந்தார்கள். ஆளுக்கு மேல் ஆள் ஏறி மிதித்துக்கொண்டே ஓடினார்கள். ஒரே புகை மண்டலம்.

மணியம் சையிக்கிள் விட்ட இடத்தை நோக்கி ஓட எந்தனித்தான். ஆனால் அந்தப் பக்கத்தில் ஒரே புகை மண்டலமாக இருந்தது. எல்லோரும் அவனையும் தள்ளிக்கொண்டு மண்டபத்துக்கு பின்னால் ஓட்டினார்கள். மதில் ஏறிக்குதித்து ரீகல் தியேட்டருக்கு பின்னால் உள்ள சகதியுள் விழுந்து எழும்பினர். குழப்ப பகுதியில் இருந்து தப்பிய மணியம் வெலிங்டன் சந்தியில் நண்பர்களைக் கண்டான். எப்பாடு பட்டாவது சயிக்கிளை எடுக்க வேண்டும் என அந்தரப்பட்டான். இப்போது அங்கே போவது உயிருக்கே ஆபத்தானது என நண்பர்கள் இழுத்துப் பிடித்தனர். மறுநாள் பொழுது விடிய முந்தி நண்பர்களை வீட்டிலிருந்து எழுப்பி முதல் பஸ்ஸில் நகருக்கு போனான்.

முத்தவெளி ஒரு யுத்த களம் போல் விரிந்து கிடந்தது. காக்கிச் சட்டைகள் மக்களைப் போகவிடாமல் தடுத்து நிறுத்தின. அறுந்த பிய்ந்த செருப்புக்களால் புல்வெளி நிறைந்திருந்தது. சைக்கிளை எடுக்க என்று அனுமதி பெற்று உள்ளே போனார்கள். பிணக் குவியல்கள் போல் சையிக்கிள்கள் உடைந்தும் நெளிந்தும் குவிந்து கிடந்தன. நெஞ்சு படபடக்க மணியம் தனது சயிக்கிளைத் தேடினான். சிறு சிறு சேதங்களுடன் எல்லோருடைய சயிக்கில்களும் கிடைத்துவிட்டன. நீண்ட நேரம் தேடியும் மணியத்தின் சயிக்கிளை மட்டும் காணவில்லை. சீட் கவரை வைத்து மணியத்தின் சயிக்கிளை நண்பன் ஒருவன் அடையாளம் கண்டான். நேற்றுவரை கவனமாகப் பாதுகாத்த பார் உடைந்து கிடந்தது. கலவரத்தில் சிதறி ஓடிய மக்கள் எல்லாம் தன் நெஞ்சில் ஏறி மிதித்து ஓடியது போன்ற வலியை உணர்ந்தான் மணியம். தாறு மாறாக உடைந்து வளைந்த அந்தச் சயிக்கிளை எடுத்துச் செல்ல அவன் மனம் ஒப்பவில்லை. உயிரே போனபிறகு பிணத்தை வைத்து என்ன செய்கிறது. ஆனாலும் அவன் நினைவில் இருந்து மட்டும் அந்தச் சயிக்கிளை நீண்ட காலத்துக்கு எடுக்க முடியவில்லை.

வேதாளம் கதையை முடிக்கும்போது மணியத்தின் வலி விக்ரமாதித்தனையும் தொத்திக்கொண்டது.

தொடரும்

சிறுகதை

# யானைத் தாத்தா

சாதாரணன்



"நல்ல மனிசன் ஏன் இப்பிடி ஆச்சுது. அண்டைக்கும் நான் போனிலை கடைசியாய் கதைச்சு முடிக்கேக்கை 'வையடி போனை' எண்டுபோட்டு போனை வைச்சிட்டார்" என்று மைதிலி தன் ஆதங் கத்தை வெளிப்படுத்தினார்.

'நான் சின்னனிலை இருந்து அண்ணை, அண்ணையெண்டுதான் கதைக்கிறனான். அவரும் எப்பவும் அன்பாயும் பாசமாயும் 'மைதிலி, மைதிலி' எண்டுதான் ஒரு ஒளிவு மறைவுமில்லாமல், எல்லாம் வெளிப்படையாக நிதானமாய் கதைச்சுக் கொண்டுவந்தவர். ஏன் அண்டைக்கெண்டு இப்பிடி ஆச்சுது!' மைதிலி மேலும் மேலும் தன்பாட்டிலேயே யோசிக்கிறார்.

கோபியும் திகைச்சுப்போனான். "மாமா எல்லாம் சரியாத்தான் நடக்கிறவர். அவர் எல்லாச் சனங்களோடையும் ஆதரவாத்தான் பழகிறவர். எங் களை மாதிரி முகநூலையும் தொலைபேசியையும் அவர் பாவிக்கிறேல்லை. நேருக்கு நேர், முகத்துக்கு நேர நேர எண்டு எல்லாரோடையும் கதைச்சுத்தான் அலு வல் பார்ப்பார். எந்த நிகழ்ச்சியையும் ஒழுங்குபடுத் தேக்கை பிடல் கஷ்ரோ சொன்னவர். மாஓ சொன்னவர் எண்டு உதாரணங்களோடை கதைப்பார். நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துகள் முட்டிமோதட்டும் என்று சொல்லி விவாதிப்பார். ஆனால் இப்பிடி நடக்குமெண்டு நான் ஒருநாளும் எதிர்பாக்கேல்லை" எண்டு அவரின் தங்கை தங்கத்துக்கு அவதான் கோபியின் அம்மாவிடம் பேசிக் கொண்டான்.

"அவன் கடைசித் தம்பி காண்டீபன் படிக்கவுமில்லை. கதைக்கப் பேசவுந் தெரியாது. வெளிநாட்டுக்குப் போனதுதான் மிச்சம். காசுப்பிசாசு. ஏழை எளியதுகளுக்கு ஒரிசதமும் குடான். ஆனால் அண்ணை அப்பிடியில்லை. அவர்தான் எங்களிலை மூத்த சகோதரன். அவர் ஊர்த் தொண்டு எண்டு உந்த வாசிகசாலை புத்தகம் எண்டுதான் அடிக்கடி பேசிக் கொள்ளுவார்"

"'உந்தச் சனங்களெல்லாம் புத்தகங்கள் வாசிக்கிறேல்லை. அதுதான் யோசினை இல்லாமல் சீவிச்சு முடிக்குதுகள். தங்கடை தங்கடை சின்னச்சின்னக் குடும்பப் பிரச்சினையளையெல்லாம் பெரிசாக்கிக் கூத்தாடுதுகள். அரசியலுந் தெரியாது. குடும்பமும் விளங்காது. சமூகத்தையும் புரிஞ்சுகொள்ளுறேல்லை' எண்டு எப்பவும் அண்ணை தனக்குள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பர்"

அண்ணர் கதிரேசு பற்றி தங்கை தன்னுள் பேசிக் கொண்டாள். கோபியும் ஆமோதித்தான்.

"உவற்றை போக்கு கொஞ்சம் தீவிரமாய் போகுதெண்டதாலைதான் அவருக்கு நானே கடலை, கௌபி, குரக்கன், பயறு எண்டு தானியச் சாப்பாடு களைச் சமைச்சு அப்பப்ப குடுத்துவிடுறனான். அவரோ ஒரு சதம் காசும் தாறேல்லை. நானும் மனிசனுக்கும் பிள்ளையளுக்கும் எங்களுக்கெண்டு செய்யிறதிலை அப்பப்ப குடுத்து விடுகிறனான். கதிரேசு அண்ணற்றை

மனுசி பக்குவும் அவரை தனிக்கவிட்டுத் தான் முந்திக் கொண்டு போவிட்டா.

ஊர்ச் சனமெல்லாம் இப்ப அண்ணையைப் பாத்துச்சிரிக்க வைச்சுவிட்டாரே. இப்பிடி நடக்குமெண்டு நான் கனவிலையும் நினைக்கேல்லை. அவர் ஊர் போற்ற வாழுவார் எண்ட எங்கடை கனவெல்லாம் கலைஞ்சு போச்சுது" எண்டு தங்கம் அலட்டத் துவங்கி விட்டாள்.

"உன்ரை கொண்ணையும் சொல்வழி கேளார். தான் பிடிச்ச முயலுக்கு மூண்டு காலெண்டுதான் எப் பவும் நிற்பார். தமிழரும் சிங்களவரும் சண்டை பிடிச்ச காலத்திலை – 1983 இனக்கலவரத்திலை சிங்கள வன்ரை கொழும்பிலை இலட்சக்கணக்கிலை காசுக்கு காணி வேண்ட உன்ரை தம்பியை வற்புறுத்தினவர். நான் தலையிட்டுத்தான் அதை அண்டைக்கே நிற் பாட்டின்னான். உந்த ஆள் சிங்களவரோடை சேர்ந்து வாழலாமெண்டு எங்களுக்கு அட்வைஸ் பண்ணுது"

"அதுக்குப்பிறகு தமிழரை சிங்களவர் வெட்டிக் கொல்லுற காலத்தில உன்ரை கொண்ணி நுவரெலியாவிலை படிப்பிச்சுக் கொண்டிருக்கேக்கே ஒரு சிங்களப் பொடியனை கொண்ணை இஞ்சை கூட்டியந்துவிட்டுது. பிறகு பொடியள் அந்தச் சிங்களவனை சந்தேகத்திலை பிடிச்சுக்கொண்டே விசாரிச்சவங்கள். பிறகு நான்தான் பொடியளோடை போய்க் கதைச்சு ஒருமாதிரிச் சிங்களப் பொடியனை மீட்டனான்."

"இந்தாளுக்கு காலம் விளங்காது. இஞ்ச நாங்கள் சிங்களவனை எதிரி எண்டும் சிங்கள ஏகாதிபத்தியம் எண்டும் சொல்லிச் சண்டை பிடிக்கிறம். உன்ரை கொண்ணை யாழ்ப்பாணத்தில தன்ரை வீட்டைக் கட்ட சிங்களவரைக் கொண்டுவாறார். பிறகு நான்தான் சொல்லித் திருப்பி அனுப்பின்னான்."

"உண்மையான எதிரி ஆர். உண்மையான ஏகாதிபத்தியம் எண்டால் என்ன எண்டு கொம்மினிசக் கதை கதைச்சுத் திரிஞ்சது. உது கடைசியிலை உப்பிடித்தான் போகுமெண்டு நான் நினைச்சனான். அது இப்ப நடந்து போச்சுது."

என்று இவ்வாறு கதிரேசுவின் மைத்துனர் தமிழரசுக் கட்சித் தம்பிப்பிள்ளை குற்றப்பத்திரம் வாசித்தார்.

கதிரேசு நல்ல மனிசன். அரசாங்கத்திலை பெரிய அதிகாரியாய் வேலை செய்து இலங்கை முழுக்கப் பல இடஙளிலும் பணிபுரிந்தவர். அவரை இப்ப கனநாளாய்க் காணாமல் தேடித் திரியினம். அவரின் சொந்தக்காறர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் கவலையில் மூழ்கிக் கிடக்கினம்.

கதிரேசுவின்ரை தம்பி கந்தரும் எல்லாத்தையும் நினைச்சு நினைச்சு கவலைப்பட்டான்.

"அண்ணையும் அநியாயமாய் ஆர் ஆற்றையோ புத்தகங்கள எல்லாம் வேண்டி தன்ரை காசைச் சில வழிச்சு வெளியிட்டுது. நூற்றுக்கு மேலை ஒவ்வொரு புத்தகமும் ஆயிரம் கொப்பியள் எண்டு காசைச் சிலவழிச்சு அச்சடிச்சுது. அதிலை ஒரு நாலைஞ்சு அவற்றை சிநேகிதர் சிலர் காசு குடுத்து வேண்டுவினம். முழுப் புத்தகங்களையும் மூட்டை மூட்டையாய் கட்டி அங்கை கொழும்பிலை, யாழ்ப்பாணத்திலை புத்தகக்கடையிலை வைச்சுக் காய்ஞ்சார். பிறகு அது போதாதெண்டு முழுப் புத்தகங் களையும் தூசைத் தட்டி கொழும்பிலை தன்ரை வாடகை வீட்டுக்கை கொண்டே நிறைச்சார். பிள்ளையள் படிக்கவும் படுக்கவும் வீடு பத்தாமல் பரிதவிச்சுதுகள். அண்ணியும எனக்கு போனிலை உவற்றை நடத் தையைச் சொல்லிக் கவலைப்பட்டார்."

"சும்மா, புத்தகம், புத்தகம் எண்டு அலம்பிக் கொண்டு திரிவார். எந்தநேரமும் பேனையும் பேப் பரும் கிடைச்சால் போதும். எழுத்து, எழுத்து, எழுத்து. ஆர்தான் உதுகளை மினைக்கெட்டு வாசிக்கினம்."

"செத்தவையையும் அண்ணை விட்டு வைக்காது. அவையைப் பற்றி கனக்க எழுதித் தள்ளிப் புத்தகம் அடிக்கும். அப்ப ஒருநாள் அண்ணி அண்ணைக்குச் சொன்னதெண்டு சொன்னவா. 'நானுஞ் செத்தபிறகுதான் என்னைப் பற்றியும் எழுதுவியள். புத்தகம் அடிப்பியள். இருக்கேக்கை இஞ்சை எங்களோடை பிள்ளைய ளோடை பழக உங்களுக்கு நேரம் இருக்காது' எண்டு நேரையும் பேசினவவாம்."

"அண்ணையும் அண்ணி செத்த உடனை அவ வுக்கு புத்தகம் அடிச்சு ஆரோ பெரிய ஓவியரைக் கொண்டு அண்ணியின்ரை படமும் கீறிப் போதாததுக்கு வீட்டு முற்றத்திலை சிலையுமல்லே கட்டிவைச்சு வாறபோற சனங்களுக்கு தன்ரை மனிசியின்ரை வடிவைப் பற்றிச் சொல்லிச் சிலையையும் ஓவியத் தையும் காட்டி அமளி பண்ணுகுது அண்ணை" என்று கதிரேசுவின் தம்பி கந்தர் கவலைப் பட்டான்.

பத்மநாதனும் தனக்குத் தெரிஞ்ச கதைகளைச் சொன்னார்.

"உவனுக்குச் சிவப்பு. சிவப்பு எண்டால் போதும். சிங்களவற்றை சிவப்பை நம்பி போன தேர்தல்களிலை அவங்களை ஆதரிச்சுக் கூட்டமெல்லாம் பேசிக் கொண்டாடினவர்.

உதாலை பாவம் மனுஷன் கட்சித் தோழர்களும் உவரை கட்சியை விட்டு இறக்கிப்போட்டினம். கலை இலக்கியச் சங்கத்திலை இருந்தும் கலைச்சுப் போட்டினம். இப்ப ஆள் தனிச்சுப் போச்சுது. இப்ப கொஞ்சம் கூடிப் போச்சுது. குழந்தையள்தான் இனிச்

சரிவரும். இப்பத்தேச் சந்ததி லொஸ்ற் ஜெனரேசன் (*Lost Generation*), துலைஞ்ச சந்ததி. ஆளுமை இழந்த சனம் எண்டு சொல்லி குழந்தையளுக்குப் பாட்டு எழுதி அதை ஸ்ரூடியோவிலை பாடப்பண்ணி யூரியூப்பிலையும் போட்டு இலட்சக்கணக்கிலை ஆக்கள் பாக்கினம எண்டு ஆக்களுக்கெல்லாம் சொல்லித்திரியிறான்."

"கெடுகுடி சொற்கேளாது" எண்டு சனத்தைப் பேசுறார். தன்ரை புத்தகம் வேண்டாதவையை ஆளுமை இல்லாத செம்மறியள் எண்டும் தன்னுக்குள்ளை திட்டித்தீர்த்தான் பாவி. இப்ப ஆளைகாணேல்லை."

"உதெல்லாம் உவன் யூனீவசிற்றியிலை படிக் கேக்கை நயினாமுகமட் எண்ட முஸ்லீம்தான் உவ ருக்குச் சிவப்பு உபதேசம் செய்து ஆள் மாறினவன். அதுக்குப்பிறகு எங்களோடயும் எந்த நேரமும் கொம் மினிசம் கொம்மினிசம்' எண்டுதான் விவாதிப்பான்.

இப்ப என்ன! எல்லாம் முடிஞ்சுது! ஆளைக் காணேல்லை. எல்லாரும் தேடிக் கொண்டிருக்கினை" என்று அவரது பல்கலைக்கழகப் பழைய மாணவன் பத்மநாதன் கரிசனையோடு கதைக்கிறார்.

"எனக்குப் பேரன் உவன். என்ரை அப்புவின்ரை சகோதரியின்ரை மேளின்ரை மேன். கதிரேசு எப்பவும் என்னைக் கண்டால் ஆச்சி, ஆச்சி எண்டுதான் கூப்பிடுறவன். அண்டைக்கொருநாள் கோவில் திருவிழாவிலை யானை முகத்தோடை தும்பிக்கையையும் வைச்சுக்கொண்டு வாறபோற சனங்களின்ரை தலையிலை தும்பிக்கையை வைச்சு ஆசிர்வாதம் குடுக்கிறது போல செய்யிறான். அதை அவன்ரை மருமேன் சிவராசு படமெடுக்கிறான். நானும் போய் என்ரை தலையை நீட்டினன். என்னையும் ஆசிர்வதிச்சுப் போட்டுப் புத்தகம் ஒண்டை நீட்டினான்."

"நான் சொன்னன் 'எனக்குப் புத்தகத்தைத் தூக்கினால் நித்திரை வரும். இல்லாட்டி ஒரு பந்தியைப் படிச்சதும் என்ரை பிள்ளையள் பற்றியும் வேறை சொந்தங்கள் பற்றியும் நினைவுகள் வரும். கவலைதான் மிஞ்சும். அதாலை நான் புத்தகத்தைத் தொடுறேல்லை' எண்டு சொன்னன். வேண்டாம் புத்தகம் எண்டன்.

கதிரேசுவுக்கு வந்துதே கோவம். 'நீயும் ஒரு மனுசியோ! நீங்களெல்லாம் சிந்திக்கத் தெரியாத மிரு கச் சாதி' எண்டு பேசிப்போட்டு என்ர முகமும் பாக்காமல் போனான். அண்டேத்தான் கடைசியாய் கண்டனான். ஆள் ஒரு அப்பாவி. என்னதான் நடந்துதோ! ஆண்டவன் தான் அவனைக் காப்பாற்ற வேணும்" என்று கதிரேசுவின் பேத்தி குஞ்சக்கா குளறுகிறா.

அன்று கடைசிநாள் கதிரேசு மகள் ஆதிரா விட்டிலைதான் இருந்தவர். இரவு பத்துமணியிருக்கும். பாத்றூமிலைபோய் கடகடவெண்டு தண்ணியை அள்ளி அவுக் அவுக் கெண்டு ஊத்திக் குளிச்சார்.

அவற்றை மகள் ஆதிராவின்ரை மகள் ஆராதனா அதிர்ச்சியிலை போய் "அம்மா, அம்மா" எண்டு தாயை எழுப்பினாள்.

தாய் ஆதிரா "அங்காலைபோங்கோ படுக்க விடுங்கோ நிம்மதியாய்" என்று ஏசிவிட்டுக் கட்டிலில் புரண்டு மறுபக்கமாய் படுத்தாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் ஆராதனா அந்தரப்பட்டாள். பேரன் கதிரேசு என்ன செய்யிறார் என்று எட்டிப் பார்த்தாள்.

கதிரேசு ஜீன்சையும் போட்டு குளிருக்கு போடுற கோட்டையும் கொழுவிக் கொண்டு தன்ரை மொட்டை மயிரையும் சீப்பாலை சீவிப் போட்டு, அவற்றை கொட்டப் பெட்டி பேசையும் பொக்கற்றிலை எடுத்து வைச்சுக்கொண்டு, "லைற்றுக்களை ஓவ் பண்ணுங்கோ. திறந்த கதவுகளை பூட்டிவையுங்கோ" எண்டு அவசர அவசரமாக அட்வைஸ் பண்ணிப்போட்டு கதிரேசு ஓடுறார்.

"தாத்தா தாத்தா எங்கை போறியள்" எண்டு ஆராதனா கேட்டாள்.

"அவசர அலுவல். பிறகு சொல்லுறன்" என்று விட்டு ஓடிப்போனவர்தான். அதுதான் அவரை அவர்கள் கண்ட கடைசிநாள்.

ஆக்கள் சிலர் அவ்வப்போது அங்கை இங்கை அவரைக் கண்டதாய் சொல்லுவினம்.

அதைக் கேட்டு மகள், சகோதரி, மருமக்கள் தேடி அங்கு சென்றாலும் அவரைக் காணக் கிடைக்காது.

"அவர் கதிரேசு புத்தகங்களை எல்லாம் கட்டி வடை மாலைபோலை புத்தக மாலையாய் கழுத்திலிருந்து முழங்கால்வரை நீளமாய் போட்டுக்கொண்டு கடை, கடையாய் வீடுவீடாத் திரியிறார் எண்டும் கையிலை ஒரு மர உண்டியலும் வைச்சுக் கொண்டு அலையுறார்" எண்டும் கண்டவை சொல்லிக் கொள்ளினம்.

தலையிலை புத்தகத்தாலை முடியும் செய்து போட்டுக் கொண்டு, உண்டியலையும் தலையிலை வைச்சுக்கொண்டு;

'அய்... யானைத்தாத்தா வாறார்.

தெய்யத் தெய்ய... அய்... தெய்யத் தெய்யத் தெய்யத் தெய்யா... தெய்யா..." என்று ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் கதிரேசு அதோ பண்ணைக் கடற்கரை வெளியில் போய்க்கொண்டிருக்கிறார்.

'அய்... யானைத் தாத்தா வாறார்...'

□

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா நாடக ஆற்றுகை
கோட்டமட்ட போட்டியில் 3ம் இடம் பெற்றது








பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழாவில் மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மாணவர்கள்



வலிமேற்கு இளைஞர் மன்ற சம்மேளனம் மறுமலர்ச்சி மன்ற மைதானத்தில் நடத்திய
இளைஞர் மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு விழா 2025 சில பதிவுகள்









தேசிய கலை இலக்கியப் பேரவை
செயற்பாட்டாளர்
தாயகம் ஆசிரியர்குழு உறுப்பினர்,
கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி
நினைவு

ஜனவரி 1,1944-டிசம்பர் 10.2016



மறுமலர்ச்சி மன்ற ஆர்வலர்
சோதிடமலர் உதவி ஆசிரியர்,
கந்தரனுபூதி நுழைவாயில்,
திருமுறைகளின் தாற்பரியம்
நூலாசிரியர் ச.அழகரத்தினம்
நினைவு

மார்ச் 31,1931-டிசம்பர் 10,2017

## வ. சிவசோதியின் 54வது பிறந்த தினத்தை முன்னிட்டு யார் எவர் நூல் வெளியீடும் ஞாபகார்த்த விருது வழங்கலும் 2025















